# பெரியார் பதித்த கொள்கைத் தடங்கள்



• கி.வீரமணி

# பெரியார் பதித்த கொள்கைத் தடங்கள்

கி.வீரமணி

**திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**
பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை - 600 007.

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | பெரியார் பதித்த கொள்கைத் தடங்கள் |
| ஆசிரியர் | : | கி.வீரமணி |
| பதிப்பு | : | முதல் பதிப்பு : 2021 |
| நூல் அளவு | : | டெம்மி (140 mm x 220 mm) |
| அச்சு எழுத்து அளவு | : | 12 points |
| பக்கங்கள் | : | 48 |
| நன்கொடை (குறைந்த அளவு) | : | ரூ.40/- |
| வெளியீடு மற்றும் உரிமை | : | **திராவிடர் கழக (இயக்க) வெளியீடு** சென்னை - 600 007. ☎: 044 - 2661 8161 |
| அச்சிட்டோர் | : | 'விடுதலை' ஆஃப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 007. |
| கிடைக்குமிடங்கள் | : | பெரியார் புத்தக நிலையம் |

- பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை -600 007. ☎: 044-26618163
- பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி-620 017 ☎: 0431-4200987

www.dravidianbookhouse.com

# 1

# நமது இயக்கம் யாருக்காக? தாழ்த்தப்பட்டவர்களுக்காகவே என்ற அந்தக் குற்றச்சாட்டுக்குப் பெரியார் விளக்கம்

*பிறவி பேதமான ஜாதி ஒழிப்பு, தீண்டாமை அழிப்பு, பெண்ணடிமை நீக்கம் ஆகியவற்றைத் தனது வாழ்நாளில் தனது வாழ்க்கை அனுபவங்களையும், நிகழ்வுகளையும் நேரில் கண்டே அவற்றை ஒழிக்கும் அப்பணியைத் தன்மேற்போட்டுக் கொண்டு, அதை, தான் நடந்த தடமாக்கி வாழ்நாள் இறுதிவரை தொடர்ந்து போராட்டக் களத்தில் நின்ற ஒப்பாரும், மிக்காரும் இல்லாத ஒரே தலைவர் தந்தை பெரியார் என்னும் சமூகப் புரட்சியாளர்!*

*காங்கிரசில் சேர்ந்தபோதுகூட இதைத்தான் தனது முக்கிய கொள்கைப் பிரகடனமாகத் தந்தை பெரியார் அறிவித்து, அப்போதே அங்கேயே தடம் பதிக்கத் தவறவில்லை!*

*1920 களில் தாழ்த்தப்பட்டோருக்காக ராஜாஜி என்று அழைக்கப்பட்ட சி.ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஒரு ஆசிரமம் தொடங்கியபோது அதனைத் திறந்து வைத்தவர் தந்தை பெரியார். (நூறாண்டுக்கு முன்பு) அந்நிகழ்வில் அவர் ஆற்றிய உரை எவ்வளவு வலிமையான, ஆற்றல் உடையதாக அமைந்துள்ளது என்பதை எண்ணிப் பார்த்தால் எவருக்கும் வியப்பே மேலிடும்!*

**“மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது; கண்ணில் படக்கூடாது; கோவிலுக்குள் போகக்கூடாது; குளத்தில் தண்ணீர் எடுக்கக்கூடாது; என்கின்றவை போன்ற கொள்கைத் தாண்டவமாடும் ஒரு நாட்டை பூகம்பத்தால் அழிக்காமலோ, எரிமலையின் நெருப்புக் குழம்பால் மூழ்கச் செய்யாமலோ பூமிப் பிளவில் அழியச் செய்யாமலோ, சண்டமாருதத்தால் துகளாக்காமலோ விட்டிருப்பதைப் பார்த்த பிறகும்கூட**

**‘கடவுள் ஒருவர் இருக்கிறார்’ என்றும், அவர் நீதிமான் என்றும், சர்வதயாபரர் என்றும் யாராவது சொல்ல வந்தால், அவர்களை என்னவென்று நினைப்பது? என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள். இம்மாதிரி கொடுமைப்படுத்தித் தாழ்த்தப்பட்ட மாபெரும் மக்கள் சமூகம் இன்னமும் எத்தனை நாளைக்குத்தான் பொறுமையோடும், சாந்தத்தோடும், அகிம்சா தர்மத்தோடும் இருக்கவேண்டும் என்று விரும்புகிறீர்கள்?**

**இம்மாதிரியான மக்கள் இன்றும் ஒரு நாட்டில் இருந்துகொண்டு உயிர் வாழ்வதைவிட, அவர்கள் இம்முயற்சியில் உயிர் துறப்பதை உண்மையிலேயே தப்பு என்று யாராவது நினைக்கின்றீர்களா?”** *என்று முழங்கினார்.*

*காங்கிரசில் சேர்ந்து உழைத்து, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகிய நிலையில் நடத்தப்பட்ட ஒவ்வொரு ஆண்டு மாநாட்டுத் தலைமை உரையிலும், பொது அரங்கப் பேருரைகளிலும் தந்தை பெரியார் இந்தத் தடத்தையே மேலும் பலமாக்கி, ஜாதி - தீண்டாமை ஒழிப்பில் தீவிரமாகவே பேசுவதோடு நிற்காமல், எழுதுவதோடு அமையாமல், களங்கண்டு, போராடி விழிகளில் குளம் கொண்ட அந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு தனிப் பலம் தந்தார்.*

*1924 இல் திருவண்ணாமலையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுத் தலைமை உரையிலும் (30 ஆவது மாகாண மாநாட்டில்) தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் வைதீகப் பார்ப்பனர்களையும், பார்ப்பனரல்லாதாரையும் கடுமையாகச் சாடத் தவறவில்லை அவர்!*

*திருவிதாங்கூர் ராஜ்ஜியத்தில் வைக்கத்தில் (கேரளா) நடந்த சத்தியாகிரகம் முழுக்க முழுக்கத் தீண்டாமை ஒழிப்புப் போராட்டம்தானே! இரண்டு முறை சிறைவாசம், கடுங்காவல் தண்டனை. தனது வாழ்விணையர் நாகம்மையார், தங்கை கண்ணம்மாள் உள்பட அங்கே நடைபெற்ற ஓராண்டு தொடர் போராட்டக் களத்தை கடைசிவரை கனன்று கொண்டே வெற்றிக் கனி பறிக்கும் வரை உழைத்தவர் தந்தை பெரியார் என்பதை எவ்வளவுதான் நம் இன எதிரிகளும், அவர்களுக்கு*

* **‘குடிஅரசு’ 21.12.1928**

*அம்பான நம்மினத் துரோகிகளும் முயற்சித்தாலும், உண்மைகள் முகிலைக் கிழித்து வந்த முழுமதியாக இன்றும் ஒளிபாய்ச்சத் தவறவில்லையே!*

*காங்கிரசில் காந்தியாரை தனது தனிப்பெரும் தலைவராக ஏற்றுக்கொண்டு, அவரது உள்ளக்கிடக்கைக்கு உருக்கொடுத்தும் உயிரைக் கொடுத்தும் உழைத்த தலைவர் தந்தை பெரியார் அவர்கள், அப்போதே காந்தியாரின் தீண்டாமை ஒழிப்புத் திட்டத்தில், காந்தியாருடன் கருத்து வேற்றுமை கொண்டதை வெளிப்படையாகவே விளக்கிடத் தவறவில்லை. அவரது நிர்மாணத் திட்டத்தை ஏற்றவர் இதில் மாறுபட்டார்!*

*“தீண்டப்படாதாருக்குத் தனிக் கிணறு, தனிக்குளம் இவற்றை நாம் தருவதால், அவர்களது தீண்டாமை ஒருபோதும் ஒழியாது. மற்றவர்களுடன் பொதுக் கிணறு, பொதுக்குளம் இவற்றில் புழங்க அனுமதிக்கும் போதுதான் தீண்டாமையை ஒழிக்க முடியும்’’ என்பதை அவரிடமே விளக்கியவர்.*

*07.04.1926 இல் (காரைக்குடி அருகே உள்ள) சிராவயல் என்னும் ஊரில் காந்தி வாசக சாலையின் ஆண்டு நிறைவு விழாவின்போது, “அது பெருமைக்குரிய விஷயமல்லவென்றும், மாறாக, சிறுமையாக மதிக்கப்பட வேண்டியதென்றும், தனிக் கிணறுகள் வெட்டுவது, ஆதிதிராவிடர்கள் நம்மைவிடத் தாழ்ந்தவர்கள், அவர்கள் நம்முடன் கலக்கத்தக்கவர்களல்ல என்று நிரந்தரமான வேலியும், ஞாபகக் குறிப்பும் ஏற்படுத்துவதாகத்தான் அர்த்தமாகும்’’ என்றும் கூறினார்.*

**(‘குடிஅரசு’,08.04.1926)**

*அதைவிட படிக்கட்டு ஜாதி முறையான வர்ணாசிரம தர்ம ஜாதி அமைப்பில் உள்ள சமூகத்தில் அறிவியல் பூர்வமான தடம்பதித்தவர் ஓர் அருமையான உண்மையை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்ததின் மூலம்,* **“தாழ்த்தப்பட்டோர்’’ தம் இழிநிலையிலிருந்து விடுதலையடையாமல், “சூத்திரர்களின்’’ இழிநிலை ஒழிப்பு சாத்தியமற்றது’’ என்பதை இடைவிடாது** *வற்புறுத்தி வரத் தவறவில்லை தந்தை பெரியார்!*

*‘‘என் போன்ற ‘சூத்திரன்’ என்று சொல்லப்படுபவன், ‘பறையர்கள்’ என்று சொல்லப்படுவோருக்கு உழைப்பதாகச் சொல்லுவதெல்லாம் சூத்திரர்கள் என்று தம்மை யாரும் கருதக்கூடாது என்பதற்காகத்தானேயல்லாமல், வேறல்ல.*

*ஆகையால், எனக்காக நான் பாடுபடுவதென்பது உங்கள் கண்ணுக்கு, உங்களுக்காகப் பாடுபடுவதாய்த் தோன்றுகிறது. உங்களை தாழ்மையாய்க் கருதும் பெண்களும், ஆண்களும் தாங்கள் பிறரால் உங்களைவிடக் கேவலமாய் தாழ் மையாகக் கருதப்படுவதை அறிவதில்லை.”*

**சிராவயல் காந்தி வாசகசாலை ஆண்டு நிறைவு விழா மற்றும் காந்தி கிணறு திறப்பு விழாவில் 08.04.1926 அன்று தந்தை பெரியார் பேச்சு. (‘குடிஅரசு’ – 25.04.1926)**

*நாமறிய 1919 இலிருந்து கிடைக்கும் ஆவணங்களிலிருந்து இந்த அளவு கூறுகிறோம்.*

*அய்யா பதித்த தடம் எப்படி ஒரே தடமாகவே அமைந்த தகைவிலாத தலைமைத் தத்துவத்தின் தனிச் சிறப்பை விளக்குகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். 1973 இல் அய்யா டிசம்பர் 24 இல் மறையும் முன்வரை அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் உரிமை என்பதன்மூலம் தீண்டாமை ஜாதியின் ஆணிவேரையே அறுக்கும், போராட்டக்களம் என்பது அவர்தம் மாறாத தடத்தினைக் காட்டவில்லையா? அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட 52 ஆண்டுகள் ஒரே இலக்குடன் உத்திகளை அடிக்கடி மாற்றினாலும் தொடர்ந்து போராடி வெற்றி கண்ட சமூகப் புரட்சி வரலாறு ஈடு இணையற்றது என்றாலும், நம் இன எதிரிகளால் அவ்வப்போது பழைய கால புராணங்களில் பல அவதாரக் கட்டுக் கதைகள்போல் பல்வேறு விமர்சன அம்புகளும், அவதூறுச் சேறுகளும் அவர்மீதும், அவர் கண்ட இயக்கமாம் திராவிடர் இயக்கம்மீதும் தொன்று தொட்டு இன்றுவரை வீழ்ந்த வண்ணமே இருக்கின்றன!*

*அதைப் பொருட்படுத்தாது, நமது லட்சியப் பயணத்தைத் தொடருவது பற்றி தந்தை பெரியார் அவர்கள்,*

**05.07.1947 அன்று திருச்சிக்கு அருகில் உள்ள மான்பிடிமங்கலத்தில்** *திராவிடர் கழக வாசக சாலையைத் திறந்து வைத்து உரையாற்றியபோது தெளிவுபடுத்தினார்.*

*தாழ்த்தப்பட்டோர் குறித்த திராவிடர் கழகத்தின் நிலைப் பாட்டினையும், அம்பேத்கர் பற்றிய தனது மனக்குறையையும் மனந்திறந்து வெளிப்படுத்தினார்.*

*“நான் தாழ்த்தப்பட்டோருக்கு அதிகமாக உழைத்திருப்பதாக இவ்வூர் திராவிடர் கழகச் சார்பில் என்னிடம் நிதியை அளித்த தாழ்த்தப்பட்ட தோழர் என்பவரான எஸ்.எஸ். மணி கூறினார். அதோடு இவ்வூர் தாழ்த்தப்பட்டோர் அனைவரும் திராவிடர் இயக்கத்திலேயே உழைக்க உறுதிகொண்டிருப்பதாகக் கூறினார்.*

*நானோ, திராவிடர் இயக்கமோ தாழ்த்தப்பட்டோருக்காக என்று இதுவரை தனியாக ஒதுங்கி வேலை செய்தது கிடையாது. வேண்டுமானால் திராவிடர் இயக்கத் திட்டமானது யார் யார் தாழ்த்தப்பட்டுள்ளார்களோ, அவர்களுக்கு உரிமை வாங்கிக் கொடுக்கும் முறையில் இருக்கிறது என்று கூறுங்கள்.* **நான் தாழ்த்தப்பட்டோருக்காகத் தனியாக உழைக்கிறேன் என்று உங்களிடையே பொய் கூற முடியாது. அவ்வித எண்ணமும் எனக்கில்லை. இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. ஏன் இவ்வாறு கூறுகிறேன். நீங்கள் வேறுவிதமாகக் கருத வேண்டாம். ஆதி திராவிடன் – திராவிடன் என்ற பிரிவையே நாங்கள் ஒப்புக் கொள்ள முடியாது. எல்லோரும் திராவிடர்கள் என்பதே எங்களது திட்டமாகும்.** *திராவிடர்களில் ஜாதி ஆணவம் படைத்த உயர் ஜாதிக்காரர்கள் இல்லாமலில்லை. இனி அவர்களை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்பதும் எனக்குத் தெரியும். ஆகவே, ஒரே இனத்தைச் சார்ந்த நாம், நமக்குள் பிரிவுகளாக சொல்லளவிலும் இருக்கக்கூடாதென்பதே எனது தீவிர எண்ணமாகும்.*

*இன்னும் விளக்கமாகக் கூறுகிறேன்,* **திராவிடர் இயக்கத்திற்கு முக்கியமான கொள்கை என்னவென்றால். இந்நாட்டில் பறையன் என்றும், பார்ப்பனன் என்றும், உயர்ந்த ஜாதிக்காரன், தாழ்ந்த ஜாதிக்காரன் என்றிருப்பதையும், சூத்திரன், பஞ்சமன் என்றிருப்பதையும் அறவே ஒழித்து எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஒரே சமுதாய மக்கள் என்னும் கொள்கையை நடைமுறையில் செய்வதேயாகும்.** *எனவே, நானோ, திராவிடர் கழகமோ நமக்குள்ளாக*

இருந்து வரும் ஜாதிகளுக்காக, இதைச் செய்தோம், அதைச் செய்தோம் என்று வீண் ஜம்பம் கொள்ளவேண்டிய அவசியமில்லை.

ஆரியனும், அவனது ஸ்தாபனமாகிய காங்கிரசும் வேண்டுமானால் சொல்லிப் பெருமையடையலாம். காரணம், வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள். நம்மை கடவுள் பேரால், அரசியல் பேரால் அடிமைப்படுத்தி, நம் நாட்டில் நமக்கு வழியில்லாமல் செய்த கரையான் போன்று அவர்கள் இங்கிருப்பதால் ஏதோ தானம் செய்வது போன்று அக்கூட்டம் ஆதிதிராவிடர்களுக்கு இதைச் செய்தேன், அதைச் செய்தேன் என்று கூறி ஆதிக்கத்தின் பித்தலாட்ட சூழ்ச்சியை மறைக்கச் செய்யலாம். நாம் ஏன், நமது திராவிடர் இயக்கம் ஏன் அவ்வித கீழ்நிலையில் செல்ல வேண்டும்? எனவே தோழர்களே, இனி **நமக்குள் ஆதிதிராவிடர் – திராவிடர் என்ற வித்தியாசங்கள் வேண்டாம். அதைவிட 'பறையன் என்று சொல்லாதே', 'சூத்திரன் என்று கூறாதே' என்று உணர்ச்சியடையச் செய்யுங்கள்.**

தவிர, தாழ்த்தப்பட்டோர் சங்கத்திற்கு எனது அருமை நண்பரும், அறிஞருமான டாக்டர் அம்பேத்கர் தலைவராக இருந்து வருகிறார். தாழ்த்தப் பட்டோர் இந்துக்களல்ல என்ற மிக ஆதாரத்தோடு ஆரியத்தின் முதுகில் தட்டி ஆணவத்தைக் குறைத்தவர்களில் அவரும் ஒரு முக்கியஸ்தர்; பேரறிஞர். நான் எதிர்பார்த்திருந்தேன், அவரின் ஒத்துழைப்பை இவ்வாரியத்தின் கொடுமைகளை ஒழிக்க. ஆனால், எதிர்பாராதவிதமாக எந்த ஆரியத்தின் ஆணிவேரை அசைத்து ஆட்டங் கொடுக்கும்படி செய்தாரோ, அதே ஆரியத்தின் ஸ்தாபனமாகிய இந்துக்களின் ஸ்தாபனமாகிய காங்கிரஸ் இன்று அம்பேத்கரை அடக்கிவிட்டது. இவரும் அத்துடன் உறவு கொண்டுவிட்டார். இன்னும் கூற வேண்டுமானால், இந்திய நாடு

*பிரிக்கப்படக்கூடாதென்றவடநாட்டின்தத்துவத்தை இன்றைய நிலையில் அவர் பேசுவதைக் கண்டு என் மனம் வருந்துகிறது. இன்னும் சில நாட்களில் திராவிட நாடு பிரிவினையை அவர் எதிர்ப்பாரோ என்று அஞ்சுகிறேன்.*

**எனினும் அவருக்குள்ள சூழ்நிலையில் வடநாட்டுத் தொடர்பில் அப்படித்தான் இருக்க வேண்டியிருக்கிறது போலும். நான் அதைப்பற்றி தப்பாகவோ, குறைவாகவோ கூற முன்வரவில்லை.** *அவர் என்ன, நம் நாட்டிலுள்ள தலைவர்கள் என்று சொல்பவர்களே, தாழ்த்தப் பட்டோரின் விடுதலையை குறிக்கோளாகக் கொண்டுள்ள திராவிடர் இயக்கத்தையும், என்னைப் பற்றியும் வீணாகப் பழிக்கிறார்கள் என்றால், வடநாட்டு அம்பேத்கரைப் பற்றி நாம் குறைகூற முடியுமா?*

*என்னையோ அல்லது திராவிடர் இயக்கத்தையோ வீணாகக் குறை கூறினாலும், இல்லாவிட்டாலும் ஒன்று கூறுகிறேன். தோழர்களே,* **திராவிடர் இயக்கம் தனது கடைசி மூச்சிருக்கும் வரையில் இந்நாட்டில் பள்ளன், பறையன் என்ற இழிஜாதிகளை ஒழித்து அவர்களை முன்னேற்றவே உழைக்கும் என்ற உறுதியை வழங்குகிறேன்.**

*தாழ்த்தப்பட்டோர் பெடரேஷனில் சேருவதை நான் இன்னும் வேண்டாமென்று கூறவில்லை. அதில் வரும் நன்மைகளையும் நீங்கள் அடையுங்கள். திராவிடர் கழகத்தில் தாழ்த்தப்பட்டோர் சேர்ந்தாலும், சேராவிட்டாலும் அதன் உழைப்பின் பலனை தாழ்த்தப்பட்ட தோழர்களுக்கு அனுபவிக்க உரிமையுண்டு.*

*கடைசியாக ஒன்று மட்டும் நிச்சயம். திராவிட நாடு பிரிவினை போராட்டத்தின் போது டாக்டர் அம்பேத்கர் போன்றவர்களும்கூட எதிர்த்தாலும், திராவிட நாட்டுப் பழங்குடி மக்கள் (தாழ்த்தப்பட்டோர் எஸ்.சி.ஆர்.) என்னுடனும், திராவிடர் இயக்கத்துடனும் தொண்டாற்றுவார்கள் என்ற உறுதி எனக்குண்டு. ஏன்? பழங்குடி மக்களும், திராவிடர் இயக்கமும் அல்லது சுயமரியாதை*

இயக்கமும் நகமும் சதையும் போன்றவை. இதை எவராலும் பிரிக்க முடியாது என்பதை பலமுறை கண்டிருக்கிறேன். எனவே, 'திராவிட நாடு' பிரிவினையின் பெரும்பாலான நலன் பழங்குடி மக்களுக்குத்தான் என்பதை இன்றில்லாவிட்டாலும் வருங்காலத்தில் உணர்வார்கள்.''

**('குடிஅரசு', 08.07.1947).**

எதையும் ஒளிவு மறைவு இன்றி வெளிப்படை யாய்ப் பேசிடும் தலைவர் நம் அறிவு ஆசான். தன்னலம் கலவாத தனிப்பெரும் தொண்டின் சிறப்பே ஆயுதம் ஏந்தாமல் ரத்தம் சிந்தாமல் – மக்களுக்கு எவ்வித இடையூறும் கேடும் ஏற்படுத்தாமல் – தம்மை வருத்திக்கொண்டு, தான் கொண்ட லட்சியத்தை அடையத்தக்க விலை இதுவே என்ற முழு நிறைவுடன், தானும் பாடுபட்டு, தனது தோழர்களையும், இயக்கத்தையும் வழிநடத்தச் செய்து, அவர் படைத்த தடம் மணல் சாலை அல்ல; உறுதிமிக்க சிமெண்ட் சாலையே என்பதை உலகமயமாகும் பெரியார் தத்துவங்கள் மூலம் வரலாற்றில் இன்று துல்லியமாய்க் கண்டு மகிழ்கிறது!

வருங்கால சந்ததிகளுக்கு, நாம் காட்டும் சரியான தடம் அய்யாவின் அந்த அடிச்சுவடுகளே!

புரிந்துகொள்ளுங்கள்!

◆

# 2

# "தாழ்த்தப்பட்டோரை" தாழ்வாகக் கருதும் "சூத்திரர்களுக்கு"....

உயர்ஜாதி என்று கூறிக் கொள்ளும் இடைநிலை ஜாதியினர் சிலர் பார்ப்பனியத்தின் மென்குரல் போல, ஒரு செய்தியை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல ஏற்றி குறை கூறுவதும், அதனை பொதுவாக, தீண்டாமை ஒழிப்புக்காகவும், தாழ்த்தப்பட்டோர் உரிமைகளுக்காகவும் பாடுபடுவதாக முன்னணியில் உள்ள பலரும் ஏற்று தாழ்த்தப்பட்ட சகோதரர்களின் நலஞ் சார்ந்து கூறுவதாக எண்ணி , சரியாகவோ, தப்பாகவோ பின்பாட்டுப் பாடுவது உண்டு.

"நீங்கள் மிகவும் சுத்தமாக இருக்கவேண்டும் (Purity)"

"உணவில் நீங்கள் மாட்டுக்கறி சாப்பிடுவதைக் கைவிட்டு, 'சுத்த சைவர்களாக' உங்களைத் தீட்டிலிருந்து நீங்கள் அப்புறப்படுத்திக் கொள்ளுங்கள்."

அதுபோலவே, பார்ப்பனர் மற்றும் பார்ப்பனரல்லாத மட்டத்தில் உசந்த ஜாதியினர் போடும் வைதீக வேஷம் முதலியவற்றை அனுசரித்தல், பேசும்போதுகூட அக்கிரகாரத் தமிழில் 'அவா, இவா' என்று பேசுதல், நாமம், விபூதி பூசி பக்திப் பழங்களாகக் காட்சி அளிப்பது என்பதைப் புகுத்திடுவார்கள்.

(இதனை பிரபல சமூக ஆய்வாளர் பேராசிரியர் எம்.என். சீனுவாஸ் அவர்கள் **"சமஸ்கிருதமயமாக்கல்"** – Piocos of Sanskritisation - என்று கூறுவார்).

அப்படிப்பட்டவர்களின் வாதத்தின் கன்னத்தில் அறைவதைப் போல தந்தை பெரியார் சரியான பதிலை அளித்தார் என்பதே இன்றைய இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அரிய செய்தியாகும்.

*“குடிக்கத் தண்ணீர் இல்லாதவர்கள், குளிப்பது எப்படி?”*

*“வருமானம் இல்லாதவர்கள், மலிவான மாட்டிறைச்சியைத் தவிர, வேறு எதை உண்ண முடியும்?”*

*“எச்சிலையும், பூச்சி புழுக்களையும் உண்ணுகிற கோழியின் இறைச்சியைவிட, மலத்தினைத் தின்னும் பன்றியின் இறைச்சியைவிட, புண்ணாக்குத் தின்னும் மாட்டின் இறைச்சி எப்படி மோசமானதாகும்?”*

*“மதுவையும், மாட்டு மாமிசத்தையும் தள்ளினால்தான் உங்கள் ஜாதி உயரும் என்று சிலர் சொல்லும் அயோக்கியத்தனமான காரியத்தை ஒப்புக்கொள்ள முடியாது. மதுகுடிப்பது என்னும் பழக்கம் பிற ஜாதியினரிடையேயும் உள்ளதே!”*

*தாழ்வு நிலையிலிருந்து மீண்டு வருவதற்கு இன்றியமையாததும், முதல் நிபந்தனையும்* **“சுயமரியாதை உணர்வுதான்”** *என்று வலியுறுத்திய தந்தை பெரியார் ஆதிதிராவிட மக்களுக்கும் கீழ்க்கண்ட அறிவுரையைத் தருகிறார்:*

*“............உங்களிடம் சில குற்றங்கள் இருக்கின்றதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. அதாவது நீங்களாகவே உங்கள் ஜாதிக்கு இழிவு சம்பாதித்துக் கொள்கிறீர்கள். அனாவசியமாக, யாரைக் கண்டாலும்* **“சாமி”** *என்று கும்பிடுகிறீர்கள். நீங்கள் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் உங்கள் இரத்தத்தில் கலந்திருக்கிறது. அதை மாற்றிவிட வேண்டும்.*

*ஒரு மனிதனைப் பார்த்தால், அவனுக்கும், உங்களுக்கும் என்ன வித்தியாசம் என்பது உங்கள் மனதில் உதிக்கவேண்டும். சுயமரியாதையில் கவனமில்லாத ஜாதியாரை உயர்த்தினாலும், உயரமாட்டார்கள். அவனவனுக்கே, தான் மனிதன் என்ற உணர்ச்சி வரவேண்டும். நீங்களாகவே பதுங்குவதும், ஒதுங்குவதுமான துர்க்குணங்கள் உங்களை விட்டுப் போகவேண்டும். அப்போதுதான் நீங்கள் சமத்துவமாக நடத்தப்படுவீர்கள்.”*

**(‘குடிஅரசு’, 25.04.1926).**

*“மாட்டுக்கறி சாப்பிடும் வெள்ளைக்காரனை ‘உயர் ஜாதிக்காரனாக’க் கருதிக் கொள்ளும் பார்ப்பானே ‘துரை’ என்று அழைக்கும்போது, அதே மாட்டுக்கறி சாப்பிடுதல் மட்டும் எப்படி உங்களை கீழ்ஜாதியாக, தொடக்கூடாத ஜாதியாகக் கருதிட வைக்கும்? இது வேடிக்கையான முரண்பாடு அல்லவா?” கேட்கிறார் தந்தை பெரியார்!*

*“உங்கள் இழிவுக்குக் காரணம், உங்களுக்கு மானம், சுயமரியாதை உணர்ச்சி ஏற்படாததுதானேயொழிய, வேறில்லை. ஆகையால்,* **நீங்கள் மற்றவர்களைப்போல், மனிதர்கள்தான் என்று எண்ணிக் கொண்டு, அதற்கேற்ற விதமாக நடந்துகொள்ளத் துணிவு கொள்ளுங்கள். அதனால் ஏற்படும் கஷ்டங்களைச் சகிக்கத் தைரியம் கொள்ளுங்கள்.”**

**(‘குடிஅரசு’, 16.06.1929).**

*“தீண்டாமை என்பது ஏணி மரப்படி போல் இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் பீடித்திருக்கிறது. பார்ப்பனியம் தொடர்ந்து நீடிப்பதற்குப் பார்ப்பனரல்லாத சூத்திர ஜாதிகளே காரணம்.*

*அவர்களை கீழான ஜாதி என்று கருதி நடத்தும் சூத்திர நாலாஞ் ஜாதியினரை நான் கேட்கிறேன், அவனையாவது “பஞ்சம ஜாதி” என்று, அய்ந்தாம் ஜாதி என்றும் கூப்பிடுவதில்* **உன் பெயர் அளவுக்கு மோசமான இழிவு அந்தப் பெயரில் இல்லை. உன்னை ‘சூத்திரன்’ என்றால், பார்ப்பான் வைப்பாட்டி மகன் ‘தேவடியாள் மகன்’ என்று அல்லவா பொருள் எழுதிவைத்துக் கூப்பிடுகிறான்? அவனைவிட நீ (பார்ப்பான் – சூத்திரன்) எப்படி “உயர்ந்தவன் உரிமை கொண்டாட முடியும்?”**

*“பார்ப்பனரல்லாதாருக்குள்ளும், பற்பல ஜாதியார் ஒருவருக்கொருவர் வித்தியாசம் பாராட்டுகின்றனர்.* **மேல்ஜாதியார்களே, நீங்கள் உங்களுக்குச் சமமாக இருக்க வேண்டுமென்று விரும்புவீர்களெனில், உங்களுக்குக் கீழே உள்ள ஜாதியார்களுக்கு நீங்கள் சமத்துவம் அளிக்கவேண்டும்.** *நம்மிடமிருக்கும் கொடுமை பார்ப்பனர்கள் காட்டும் கொடுமையைவிடச் சற்று அதிகம் என்று சொல்ல வேண்டும்.”*

*நாலாஞ் ஜாதியாகிய சூத்திரப் பெருமக்களில்(?) சிலர் திராவிடர் கழகத்தைப் பார்த்து, கிராமப் பகுதிகள் சிலவற்றில் அது பள்ளன் கட்சி, பறையன் கட்சி என்று பகிரங்கமாய்ப் பேசி தங்கள் ஜாதி ஆணவத்தை, வெறியை வெளிச்சம் போட்டுக் காட்டியபோது,*

*தந்தை பெரியார் அழுத்தந்திருத்தமாகச் சொன்னார்; "ஆம், அதிலென்ன சந்தேகம்? யார் மிகவும் கீழே அடியில் வதிகிறார்களோ, அவர்களை மேலே கொண்டு வருவதுதானே முதல் வேலையாய் இருக்க வேண்டும் - இருக்க முடியும். ஆம்! எங்கள் கட்சி அவர்கள் கட்சிதான் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளுகிறோம்.*

*எங்கள் இயக்கம் ஒன்றில்தானே எவருக்கும் ஜாதி அடையாளமே கிடையாத நிலை.*

*விளக்கமாகத் தந்தை பெரியார் தடம் பதிக்கிறார். உற்றுக் கவனியுங்கள். உளவியல் பார்வையும், அறிவியல் அணுகுமுறையும் ஒருங்கே கலந்து பதிக்கப்பட்ட தடம் அது!*

*"சூத்திரர்"களின் விடுதலை என்பது தாழ்த்தப்பட்டோரின் விடுதலையிலிருந்து பிரிக்க முடியாதது என்று கருதிய தந்தை பெரியார், நாகையில் ஓர் உரையில் மிகவும் தெளிவாக அதைத் தெளிவுபடுத்தினார்.*

> *"ஜாதியை நாங்கள் ஒன்றாகக் கருதுகிறோம். ஆம்! ஆக்க முயற்சிக்கின்றோம். அதில் சந்தேகமில்லை. மனித ஜாதி ஒன்றாகித்தான் தீரவேண்டும்.*
>
> *நாங்கள் ஆதிதிராவிடர்களைப் பற்றிப் பேசும் போது, பார்ப்பனர்கள் மன வருத்தம் அடைவதில் அர்த்தம் உண்டு; ஆனால், பார்ப்பனரல்லாதார் மன வருத்தம் அடைவதில் சிறிதும் அர்த்தமில்லை. 'பறையன்' பட்டம் போகாமல் உங்களுடைய 'சூத்திரப் பட்டம்' போய்விடும் என்று கருதுவீர்களேயானால், நீங்கள் வடிகட்டின முட்டாளாவீர்கள். மற்றும் பேசப் போனால், 'பறையன்', 'சக்கிலி' என்பதற்கு இன்னார்தான் உரிமை என்றும், அது கீழ்ஜாதி என்பதற்கு இன்னது ஆதாரம் என்று சொல்வதற்கு ஒன்றுமே இல்லை.*

*கைபலமே ஒழிய, தந்திரமே ஒழிய வேறில்லை. உங்கள் சூத்திரப் பட்டங்களுக்கு கடவுள், மதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம் ஆகிய அநேக ஆதாரங்கள் உண்டு. இத்தனையும் நாசமாக்கி, அடியோடு ஒழிந்தால் அல்லாமல், உங்கள் தலையில் இருக்கும் 'சூத்திரப் பட்டம்' கீழே இறங்காது! ஆகவே, யாருக்காவது மான உணர்ச்சி இருந்தால், "நீங்கள் ஜாதியை ஒன்றாக்குகிறீர்களே" என்று நம்மைப் பார்த்துக் கேட்டிருக்கமாட்டீர்கள்!*

*ஆகவே, ஆதிதிராவிடர் நன்மையைக் கோரி பேசப்படும் பேச்சுகளும், செய்யப்படும் முயற்சிகளும் ஆதிதிராவிடரல்லாத மக்களில் "பார்ப்பனரல்லாத எல்லோருடைய நன்மைக்கும் என்பதாக உணருங்கள்!"* **('குடிஅரசு', 11.10.1931).**

*"திராவிட நாட்டில் எப்படி வெளியிலிருந்து வந்த ஆரியர்களுக்குத் திராவிட மக்கள் எப்படி தீண்டப்படாதவர்களாக இருக்கிறார்களோ, அப்படி திராவிடர்களுக்கு ஆதிதிராவிடர்கள் அதைவிட மேம்பட்ட தீண்டப்படாதவர்களாய் இருக்கிறார்கள்.* **இந்த நிலைமை திராவிட சமுதாயத்திற்கே மானக்கேடான நிலைமையாகும்** *என்பதோடு, திராவிடர்களை ஆரியர்கள் தீண்டப்படாத மக்களென்று வகுத்திருப்பதையும், நடத்துவதையும் அரண் செய்கிறது.*

*ஆகையால், ஆதிதிராவிடர் என்ற பெயரே மாற்றப்பட்டு, இருவரும் திராவிடர்கள் என்கின்ற பெயரிலேயே வழங்கப்பட வேண்டுமென்பதும், திராவிடருக்கும் ஆதிதிராவிடருக்கும் சமுதாயத் துறையில் உள்ள எல்லா வித்தியாசங்களும், பேதங்களும் ஒழிந்து, ஒரே சமூகமாக ஆகவேண்டும் என்பதும் என் ஆசை!"* **('குடிஅரசு', 25.08.1940).**

◆

# 3

# ஜாதிப் பிரிவு இருக்கும்வரை உயர்வு - தாழ்வு போகுமா?

*தந்தை பெரியார் பதித்த தடம் எவ்வளவு உறுதியானது என்பதை இந்த உரையின் வெளிச்சம் நமது இளைய தலைமுறைக்கு உணர்த்தும்.*

*"திராவிடர் கழகம் என்பது இந்த நாட்டு பழங்குடி மக்களின் உண்மையான ஸ்தாபனம். அவர்களுடைய இழிவைப் போக்குவதுதான் இந்த ஸ்தாபனத்தின் நோக்கமும் லட்சியமும் ஆகும்!*

*என்னைப் பொறுத்தவரையில் நான் காங்கிரசில் ஈடுபட்டது,*

*சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டது,*

*ஜஸ்டிஸ் இயக்கம்,*

*திராவிடர் கழகம் ஆகியவைகளில் ஈடுபட்டது எதற்காக?*

**ஏன் இவைகளில் தொண்டாற்றுகின்றேன்?**

**அரசியலைக் கைப்பற்ற அல்ல பின், ஏன்? சமூகத்தில் ஒரு பெரும் புரட்சியை உண்டு பண்ணுவதற்காகவே!**

*அரசியல் நோக்கமுடையவர்கள் என்மீது குறை கூறுகிறார்கள். ஆகவே, திராவிடர் கழகம் சமுதாய சம்பந்தமுடையதுதான்!*

**– 10.04.1947 சென்னை கோகலே மண்டபத்தில் பெரியார் பேருரை.**

*"திராவிடர் கழகத்தைப் பற்றிய ஒரு கேள்வியை சிலர் எழுப்புகிறார்கள். அது குதர்க்கமாகவோ குறும்புக்காகவோ, அல்லது தெளிவு பெறுவதற்காகவோ இருக்கலாம். அது எப்படிப்பட்டதாக இருந்தாலும் நமது பதில் இதுதான்.*

*"திராவிடர்கள் என்று எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்களா? என்கிற கேள்விக்கு தந்தை பெரியார் அளித்த பதில் இதோ:*

*"திராவிடர் கழகத்தைப் பற்றி சிலருக்குத் தெரிந்திருக்கலாம்; சிலருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆகவே சுருக்கமாகச் சொல்லுகிறேன், கேளுங்கள்.*

*"திராவிடர் கழகம் என்பது இந்நாட்டுப் பழங்குடி பெருமக்களாகிய 100க்கு 90 பேர்களான மக்களின் நலனுக்குப் பாடுபட்டு வரும் ஒரு கழகம்.*

*இந்த 90 பேரும் தம்மை 'திராவிடர்கள்' என்றோ, அல்லது திராவிடர் கழகம் தம் நலனுக்காகவே ஏற்பட்டு உழைத்து வருகின்றதென்றோ ஒப்புக் கொள்ளுகிறார்களா என்று நீங்கள் கேட்கலாம்.*

*அவர்கள் எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்களா இல்லையா என்பது பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. இவர்களுக்குள்ள இழிவு எங்களுக்குக் கஷ்டமாயிருக்கிறது! ஆகவே தான் இவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இழிவு நீங்க வேண்டும் என்று இவர்களுக்கும் சேர்த்துக் கூப்பாடு போட்டு வருகிறோம்.*

*தண்ணீர்க் கஷ்டத்தைப் பார்க்க சகிக்க மாட்டாமல் ஒருவன் இவ்வீதியில் ஒரு குழாய் வைக்க அல்லது கிணறு தோண்ட முற்படுவானானால், அவனை "என்னய்யா, கிணறு வெட்டுகிறாயே இவ்வீதி மக்களும் இக்கிணற்றில் தண்ணீர் எடுப்பதாக உறுதி மொழி வாங்கிக் கொண்டாயா?" என்று கேட்பது எவ்வளவு முட்டாள்தனம்?*

*அப்படிப்பட்ட முட்டாள்தனம் தான் திராவிடர் கழகத்தின் பிரதிநிதியாக இந்த 90 பேரும் ஒப்புக் கொள்ளுகிறார்களா - இல்லையா என்று கேட்பதும்!*

*இவர்கள் ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ளாவிட்டாலும் இவர்களும் சமூகத்தில் "கீழ்மக்கள்" - சூத்திரர்கள், பஞ்சமர்கள் தானே!*

**கோகலே மண்டப உரை, 05.12.1947**

*எனவே, இந்த நிலையில் இன்று நமது நாட்டில் பார்ப்பான் ஒருவனைத் தவிர, மற்றவர்கள் தாழ்ந்த ஜாதியர்கள். அதாவது, பார்ப்பனனால் தொடவும் சமபந்தி போஜனம் பண்ணவும் மற்றும் சில பொது உரிமைகள் பெறவும் கூடாத ஜாதியார்கள் என்பதும், அவனுக்கு அடிமையாய் இருக்கவும், "விபசாரம்" "கீழ்*

மேல் ஜாதிக்கலப்பு" என்று சொல்லும்படியான இழிவுத்தன்மையில் பிறந்தவர்கள் என்பதும், இன்றைய நம் ஜாதித் தத்துவ மாயிருக்கின்றது.

மற்றபடி, இவற்றிற்கு எவ்வித தத்துவார்த்தம் சொல்லுவதானாலும் அதை மூடர்கள் முன்னால் மாத்திரம் சொல்லிக் கொள்ளக்கூடுமே தவிர, ஜாதிக் கும், ஜாதியைக் கற்பித்த மதத்திற்கும், இவ்விரண்டிற்கு ஆதாரமான வேதம், சாஸ்திரம், தர்மம் என்று சொல்லப்பட்ட ஆதார நூல்களில் இருக்கும் உண்மைகளுக்கும் எவ்வித ஆட்சேபணையும், எவ்வித தத்துவார்த்தமும் சொல்லமுடியாது என்பதையும் யாதொரு பதிலும் சொல்லாமல், பேசாமல் இழிவை ஒப்புக்கொண்டுதான் தீர வேண்டியதாகும்.

இவை ஒரு புறமிருக்க, இந்த ஜாதிக் கிரமத்தில் பார்ப்பனர்களைத் தவிர, மற்றவர்களுக்கு ஏற்படுத்தப் பட்டிருக்கும் யோக்கியதைகளையும், உரிமைகளையும் பார்ப்போமானால் கடுகளவு பகுத்தறிவோ, மானமோ இருக்கின்ற மனிதர்கள் ஒருக்காலமும் தங்கள் ஜாதிப் பேரைச் சொல்லிக் கொள்ள முடியாதபடியும், அதைக் கனவிலும் நினைக்க முடியாதபடியும் இருப்பதை நன்றாய் உணரலாம். அதாவது நாலாவது ஜாதியார்களாக சூத்திரர்கள் என்று சொல்லப்படும் வகுப்பாருக்குப் பார்ப்பனர்கள் ஏற்படுத்தியிருக்கும் உரிமையானது எப்படி இருக்கின்றது என்று பார்த்தால் இப்போது "பாரம்பரியமாய் குற்றம் புரியும் வகுப்பார்" (அதாவது கிரிமினல் ட்ரைப்) என்று சொல்லக்கூடியவர்களுக்குச் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிர்பந்தத்திற்கும் சட்ட திட்டங்களுக்கும் அவர்களை நடத்துகின்ற மாதிரிக்கும் சிறிதுகூட குறைவில்லாமல் நடத்துகின்ற மாதிரியாகவே ஏற்படுத்தி இருக்கின்றார்கள்.

உதாரணமாக, அதுவும் தர்ம சாத்திரங்கள் என்று சொல்லப்பட்ட சட்டங்களில் உள்ளதையே சொல்லுவோம்.

**“ஸ்நாத மவம், கஜமத்தம் ரிஷபம்**
**காம மோஹிதம் சூத்தரமக்ஷரசம்**
**யுக்தம் தூரதப் பரிவர்ஜையேல்”**

அதாவது “குளிப்பாட்டிய குதிரையையும், மதம் கொண்ட யானையையும், காமவிகாரம் கொண்ட காளை மாட்டையும்,

*எழுத்துத் தெரிந்த சூத்திரனையும் பக்கத்தில் சேர்க்கக் கூடாது" என்பது கருத்தாகும்.*

**"ஜபஸ், தப, தீர்த்தயாத்திர, பிரவர்ஜ் ஜய, மந்தர சாதனம் தேவதாரா**

*தனம் சசய்வஸ்திரீ சூத்திர பத தானிஷள்"*

*அதாவது "ஜபம், தபசு, தீர்த்தயாத்திரை, சந்நியாசம், கடவுள் தோத்திரம், ஆராதனை இந்தக் காரியங்கள் பெண்களும் சூத்திரர்களும் ஒருபோதும் செய்யக் கூடாது" என்பது கருத்தாகும்.*

**"நபடேல் சமஸ்கிருதம் வாணீம்"** *சூத்திரன் சமஸ்கிருதம் படிக்கக்கூடாது என்பது கருத்தாகும்.*

**"நைவ சாதிரம் படே நைவ சுருணுபாத் வைதி காக்ஷரம் நஸ்நாயாது தயால் பூர்வம் தபோ மந்திரஞ் சுவர்ஜ்ஜயேல்"**

*சூத்திரன் சாஸ்திரம் படிக்கவோ, வேதத்தைக் கேட்கவோ ஒருக்காலும் கூடாது. அவன் சூரிய உதயத்திற்கு முன் குளிக்கவும், மந்திரம் ஜெபிக்கவும், தபசு செய்யவும் கண்டிப்பாய் கூடாது என்பது. அதாவது,*

*"இதிஹாச புராணானி நபடேச்ரோது மர்ஹசி"*

*இதிகாச புராணங்களும் கூட (சூத்திரர்கள்) படிக்கக் கூடாது. ஆனால் (பிராமணர்கள் படிக்க) காதால் கேட்கலாம்.*

*"சாதுர்வர்ண்யம்*
*மயாசிருஷ்டம்*
*பரிசரியாத் மகம்*
*கர்மம் சூத்ரஸியாபி பாவனாம்" (கீதை)*

*நான்கு வர்ணங்களும் என்னால் சிருஷ்டிக்கப்பட்டவை. அவற்றுள் சூத்திரனுக்குப் பிராமண சிசு ருசைஷதான் தர்மம் என்பது கருத்து.*

*இதுபோல் ஆயிரக்கணக்காக எழுதிக் கொண்டே போகலாம். இவைகள் எல்லாம் தான் நமது ஜாதிமத ஆச்சார அனுஷ்டானங்களாக இருக்கப்பட வேண்டியவை என்று வேதங்கள், தர்ம சாஸ்திரங்கள் பகவான் வாக்குகள் என்று சொல்லப்படுபவைகளில் சொல்லப்பட்டவைகளாகும்.*

*எந்தக் காரணத்தாலோ இந்துமத தர்மத்தை அனுஷ்டித்துத் தீரவேண்டியதல்லாத ஓர் ஆட்சி இந்த நாட்டுக்கு ஏற்பட்டதன்*

பலனால் நம்மில் சிலராவது இந்தத் தர்மங்கள் முழுவதும் வலியுறுத்தப்படாமல் இருக்க முடிகின்றது. ஆனால், இந்த நிலையாலும் நாம் மறுபடி நமது ஜாதியையும் மதத்தையும் காப்பாற்றும் கவலைகொண்டு ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கென்று மதத்தையும், ஜாதியையும் சொல்லி, அவற்றை நிலைநிறுத்திக் கொண்டே போவோமானால் பின்னால் நமது நிலை என்ன ஆகும் என்பதைச் சற்று யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இந்துக்கள் என்பவர்களுக்குள் ஜாதிப் பிரிவு இருக்கும் வரை உயர்வு தாழ்வு போகாது என்று கண்டிப்பாகும்.

இன்றைய தினம் தேசியவாதிகளாய் இருக்கின்றவர்கள் இந்தியா சுதந்திரம் அல்லது பூரண சுயேச்சை அடைய வேண்டுமென்கின்ற உண்மையான ஆசையுடையவர் களாயிருப்பார்களானால், அவர்கள் வெள்ளைக்கார ஆட்சியிருக்கும் போதே ஜாதி வித்தியாசங்கள் எல்லாம் ஒழியும்படியான ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டியதுதான் அறிவுள்ள வேலையாகும். அதைவிட்டு விட்டு, முதலில் “நீ போய் விடு, நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்” என்று சொன்னால் அது, “தான் சாவதற்கு“ தானே மருந்து குடித்தது” போல்தான் ஆகுமே தவிர, வேறொரு பயனும் தராது. ஏனெனில், இந்தியாவில் இந்துக்கள் என்பவர்களில் 1000க்கு 999 பேருக்கு குறையாமல் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க வேண்டும் என்கின்ற எண்ணமில்லாதவர்களாய் இருப்பதோடு, ஒவ்வொருவரும் மேல்ஜாதி ஆகவேண்டும் என்று ஆசைப்படுவதும் தனக்குக் கீழ் பல ஜாதிகள் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுவதுமான உணர்ச்சி உள்ளவர்களாகவே இருக்கின்றார்கள். இந்த நிலையில் இன்றையதினம் இருக்கும் பல சவுகரியங்களை ஒழித்துவிட்டு வருணாசிரமக் கொள்கையும், ஜாதி ஆதிக்கத் திமிரும் உடையவர்களான மக்களிடம் ஆட்சியும் பிரதிநிதித்துவமும் வந்து விட்டால் பிறகு எந்த விதத்திலும் ஜாதிக் கொடுமைகள் ஒழியா.

**– (’குடிஅரசு’, தலையங்கம், 30.11.1933)**

◆

# 4

# நாஸ்திகர்கள் ஆகாமல் ஜாதியை ஒழிக்க முடியாது!

தந்தை பெரியார் அவர்களுக்கு ஜாதி - பிறவி பேத ஒழிப்பு - தீண்டாமை அழிப்பு என்பது இயல்பானது. இளம் வயதில் திண்ணைப் பள்ளிக்கூட வாழ்வில் தண்ணீர்த் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள முயன்றபோது, தண்ணீர் தருவதிலும், தண்ணீர் குடிக்கும்போதும் காட்டப்பட்ட ஜாதி வித்தியாச வெளிச்சமும் பெரியார் மனதை அந்தப் பிஞ்சுப் பருவத்திலேயே நெஞ்சில் சுட்ட நெருப்பாகியது!

உலக நடப்புகளே "அதிகம் படிக்காத - ஏன், "படிக்காத" பெரியாருக்கு மனித குலத்தின் பேத ஒழிப்புக்கான லட்சிய விதை அக்காலத்திலேயே அந்த நொடியிலே ஊன்றப்பட்டு விட்டது.

சுயசிந்தனையாளரான தந்தை பெரியார் வாழ்க்கையின் இளமைப் பருவத்தில் தனது வீட்டில் உள்ள ஆச்சார அனுஷ்டான வைதிகங்களை மதிக்காமல், எவர் வீட்டிலும் ஜாதி, மத பேதமின்றி உண்ணுவதும், எதையும் தீட்டுக்கழித்து வீதியில் வீசப்பட்ட தேங்காய், பழம் போன்ற 'கழிப்பு கழித்து' வீசி, வீதியில் விட்டெறியப்பட்டதைக்கூட எடுத்துக் கழுவி விட்டு அதைத் தின்று ருசித்தல் போன்ற துணிச்சலான எதிர்நீச்சல் வாழ்வை, தனக்கு வசதியான வாழ்க்கைப் பாதையாக ஆக்கிக் கொண்டார்!

தந்தை பெரியார் பதித்த தடமான ஈரோட்டுப் பாதையை அவரது கசப்பான அனுபவங்களும், கடமையாற்றத் தூண்டிய சிந்தனைகளும், அதற்கேற்ப அவரது தனி வாழ்வு, பொது வாழ்வு, அதுவும் பார்ப்பனர்களிடம் நெருங்கிப் பழகி அவர்களது உண்மையான உள்ளுருவத்தையும் புரிந்துகொள்ளப் பெரிதும் துணை நின்றது!

*ஜாதி, தீண்டாமை ஒழிப்பு என்பது அவரது வாழ்க்கையின் லட்சியமாகவே இருந்தாலும், அவர் இளமைக்காலத்திலிருந்து தனது வீட்டிற்கு வந்து கதாகாலட்சேபங்களைச் செய்து, வருமானம் பெற்றுச் சென்ற சனாதனிகளிடம் குறுக்கு விவாதங்களை நடத்தி, கேள்விகள் கேட்டு, அவர்கள் திக்குமுக்காடியதைப் பார்த்து ரசித்து, அந்தக் கேள்வி கேட்கும் பட்டறிவுத் திறனைப் பாங்குடன் வளர்த்துக் கொண்டதோடு, தனி வாழ்க்கையில் திளைத்த பெரியார், பொது வாழ்க்கையில் அடியெடுத்து வைத்ததே, சமூகநீதி அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டிய சமத்துவ சம வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்தில்தான்.*

*பொதுவாழ்வில் முதலில் சென்னை மாகாண சங்கத்தின் (இது நீதிக்கட்சியினருக்கு எதிராக அக்கால காங்கிரசும், பார்ப்பனர்களும் தொடங்கிய அமைப்பு) மாநில துணைத் தலைவர்களில் ஒருவராகத் தேர்வு செய்யப்பட்டபோது, திரு.வி.க.வின் நட்புறவும் ஏற்பட்டது. ஆச்சாரியார் நட்பு அவர் சேலம் நகர சபைத் தலைவர், இவர் ஈரோடு நகர சபைத் தலைவர் என்ற உறவில் முகிழ்த்த ஒன்று. ஆச்சாரியாரும், டாக்டர் வரதராஜுலு நாயுடுவும்தான் பெரியாரை (அப்போது இப் பட்டம் இல்லை)'ஈ.வெ.ரா., ஸ்ரீமான் நாயக்கர்' என்றே அழைக்கப்பட்டவர் காங்கிரசில் சேர்ந்து உழைத்தார். சமூக நீதிதான் அவரது முதன்மையான லட்சியம்!*

*1922 லேயே இராமாயணத்தை சம்பூகன் வதைக்காக கொளுத்தவேண்டும் என்று திருப்பூரில் ராஜாஜி, திரு.வி.க., டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு ஆகியோர் முன்னிலையில், பொதுக்கூட்டங்களில் பேசியவர். இராமாயண எதிர்ப்பு என்பது அய்யாவைப் பொறுத்தவரை ஜாதி ஒழிப்பு, ஜாதி தர்ம அடிப்படையில் சூத்திர சம்பூகன் தலையை இராமன் வெட்டினான் என்பதைப் படித்த பதைப்பின் காரணமாகத்தானே சுயமரியாதை இயக்கத் தோற்றத்திற்கு முன்பே காங்கிரஸ் மேடைகளில் பேசிய போதே ஏற்பட்டுவிட்டது.*

*அறிவியல் அணுகுமுறைதான் சமூக விஞ்ஞானியான தந்தை பெரியாரின் அணுகுமுறையானதால், ஜாதி தீண்டாமைக்கு முட்டுக் கொடுத்துத் தாங்கிப் பிடிக்கும் எதனையும் எதிர்த்தார்!*

*இதோ பெரியார் விளக்குகிறார், படியுங்கள்:*

*“ஜாதி வித்தியாசத்துக்கும் பகுத்தறிவுக்கும் ஏதாவது சம்மந்தமுண்டா? பொருள் வித்தியாசத்துக்கும் பகுத்தறிவுக்கும் ஏதாவது சம்மந்தமுண்டா?*

*இவ் வித்தியாசங்கள் பகுத்தறிவினாலா? அல்லது மிருக சுபாவத்தாலா? அயோக்கியத்தனத்தாலா? என்று யோசித்துப் பாருங்கள். இவைகள் கடவுள்கள் முதல் தீர்க்கதரிசிகள், மகாத்மாக்கள், கடவுள் அவதாரங்கள் முதல் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றனவே. ஆகவே, இவர்கள் இத்தனை பேர்களும் (இருந்திருந்தால்) பகுத்தறிவா ளர்கள் என்றோ மனிதத்தன்மை உடையவர்கள் என்றோ சொல்ல முடியுமா? எந்த தர்ம ராஜ்ஜியமும் நீதிராஜ்ஜியமும் மக்களுக்குள் இப்படிப்பட்ட பிறவி இழிவையும் தொல்லையையும் ஏற்படுத்துவதை – இருந்து வருவதை ஒழிக்க முடியவில்லையே? எப்படிப்பட்ட மதமும் மத தர்மமும் இவைகளை ஒழிக்கவில்லையே. ஆகவே, நாம் இவைகளை எதிர்ப்பதால் என்ன கெடுதி என்று கேட்கின்றேன்.*

*சுயமரியாதை இயக்கம் ஜாதியிலும், மதத்திலும், கடவுளிலும் பிரவேசித்ததாலேயே அதன் யோக்கியதையைக் கெடுத்துக் கொண்டது என்கிறார்கள்.*

*மனிதனுக்கு இழிவு ஜாதியால்தானே உண்டாகி வருகிறது. ஜாதியோ மதத்தினால்தானே உண்டாகி வருகின்றது. மதமோ கடவுளால்தானே உண்டாகி வருகின்றது. இவற்றுள் ஒன்றை வைத்துக்கொண்டு ஒன்றை அழிக்க முடியுமா? ஒன்றுக்கொன்று எவ்வளவு கட்டுப்பாடும் பந்தமும் உடையதாக இருக்கின்றன என்று யோசித்துப் பாருங்கள்.*

*ஜாதியை அழித்துவிட்டால் இந்துமதம் நிலைக்குமா? அல்லது இந்துமதத்தை வைத்துக்கொண்டு ஜாதியை அழிக்க முடியுமா? ஜாதியையும் மதத்தையும் அழித்துவிட்டுக் கடவுளை வைத்துக் கொண்டிருக்க முடியுமா?*

*நான்கு ஜாதியை இந்து மத தர்ம சாஸ்திரமாகிய மனுதர்ம சாஸ்திரங்கள் முதலியவை ஒப்புக் கொள்ளுகின்றன. நான்கு ஜாதிமுறைகளை கீதை முதலிய கடவுள் வாக்குகள் ஒப்புக் கொள்கின்றன.*

*“நான்கு ஜாதிகளையும் நானே சிருஷ்டி செய்தேன். அந்தந்த ஜாதிகளுக்கு ஏற்ற தர்மங்களை (தொழில் களை)யும் நானே*

சிருஷ்டி செய்தேன், அத்தருமங்கள் தவறி எவனாவது நடந்தால் அவனை மீளா நரகத்தில் அழுத்தி இம்சிப்பேன்" என்று இந்துக்களின் ஒப்பற்ற உயர் தத்துவமுள்ள கடவுளான கிருஷ்ண பகவான் என்பவர் கூறி இருக்கிறார்.

இதிலிருந்து ஜாதிக் கொடுமை, ஜாதி இழிவு, ஜாதி பேதம், ஜாதிப்பிரிவு ஆகியவைகளையோ, இவற்றில் ஏதாவது ஒன்றையோ ஒழிக்க வேண்டுமானால் மதங்களையும் கடவுள்களையும் சாஸ்திரங்களையும் ஒழிக்காமல் முடியுமா? அல்லது இவைகளுக்குப் பதில் ஏற்படுத்தா மலாவது முடியுமா? என்று யோசித்துப்பாருங்கள். வீணாய் சுயமரியாதைக்காரர்கள் ஜாதியை மதத்தைகடவுளைஎதிர்க்கிறார்கள்,ஒழிக்கவேண்டுமென்கிறார்கள் என்பதில் ஏதாவது அர்த்தமோ அறிவோ இருக்கிறதா என்று பாருங்கள்.

கடவுளை, மதத்தை, சாஸ்திரங்களை நாங்கள்தானா எதிர்க்கிறோம். மற்றவர்கள் வாழ்த்துகிறார்களா? என்று பாருங்கள். எந்த இந்து ஒருவன் ஜாதிபேதமும், ஜாதிப் பிரிவும், ஜாதி தர்மமும் ஒழிய வேண்டும் என்று சொல்லுகிறானோ, யார் யார்தீண்டாமைஒழியவேண்டும்என்றுகூடசொல்லுகிறார்களோ, அவர்கள் எல்லோரும் மதத்தையும், கடவுளையும் ஒழித்தவர்கள் அல்லவா? அல்லது மதத்தையும் கடவுளையும் எதிர்த்தவர்கள் அல்லவா? மீறினவர்கள் அல்லவா? என்று யோசித்துப் பாருங்கள்.

கிருஷ்ணன் கடவுளென்றும், அவதாரம் என்றும் ஒப்புக் கொண்டால், கீதை அவன் உபதேசமென்றும் கருதுபவர்கள் ஜாதியையும் ஜாதி தர்மத்தை (தொழிலையும்) ஒழிக்க முடியுமா? ஒழியவேண்டுமென்று சொல்லவாவது முடியுமா? என்று கேட்கின்றேன். இந்தக் காரணத்தால்தானே காந்தியார் வெகு ஜாக்கிரதையாக நான்கு ஜாதிகளையும் அவைகளினது தர்மங்களையும் (வர்ணாசிர மதர்மத்தை) காக்கவே நான் உயிர் வைத்திருக்கிறேன். அதற்காகவே சுயராஜ்யம் கேட்கிறேன். அதற்காகவே தீண்டாதவர்களுக்கு தனிப்பிரதிநிதித்துவம் செத்தாலும் கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறேன் என்கிறார்.

அதனால்தானே அவர், பழைய தர்மங்களைக் கெடாமல் காப்பாற்ற அவதாரமெடுத்த அவதார புருஷர் என்றும், மகாத்மா என்றும் பார்ப்பனர்கள் கொண்டாடுகிறார்கள். ஆகவே, அவர் ஒழிந்த மற்றவர்கள் - அதாவது ஜாதி வித்தியாசமும், ஜாதி

*தர்மமும் ஒழிக்க வேண்டுமென்கின்றவர்கள் - எல்லோரும் ஓர் அளவுக்காவது சுயமரியாதைக்காரர் அல்லவா என்று பாருங்கள். கராச்சி தீர்மானத்தின் முக்கிய தத்துவமே பழைய சாஸ்திரங்கள், பழக்க வழக்கங்கள், தொழில்முறை முதலியவைகள்கூட காப்பாற்றப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டதும், அந்தப்படி தீர்மானங்கள் இன்றும் வைத்துக் கொண்டிருப்பதும், ஆஸ்திகத்தைக் காப்பாற்றவும் கிருஷ்ணனையும் கீதையையும் மனுதர்ம சாஸ்திரத்தையும் வருணாசிரம தர்மத்தையும் காப்பாற்றவுமே ஒழிய வேறு என்ன?*

*ஆகவே, நாம் உண்மையில் ஜாதி பேதத்தையும், ஜாதி இழிவையும் வருணாசிரம தர்மத்தையும் சூத்திரத்தன்மையும் ஒழிக்க வேண்டுமானால், எப்படியாவது ஒரு வழியில் நாஸ்திகர்களாகாமல் முடியாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நாம் மாத்திரமல்லாமல் மற்றபடி வேறு யார் ஜாதியை ஒழிப்பதானாலும் நாஸ்திகர்களாகித்தான் தீரவேண்டும். நாம் மாத்திரம் துணிவுடன் முன் வைத்த காலைப் பின் வைக்காமல் இந்த விஷயங்களில் உறுதியாய் இருப்போமானால் ஜாதி பேதத்தால் ஜாதிக்கிரமத்தால் கஷ்டப்படும் மக்கள் எல்லோரும் நம்முடன் சேர்ந்துதான் தீருவார்கள்.*

*பார்ப்பனர்கள் மாத்திரம் எந்தக் காலத்திலும் நம்முடன் சேரமாட்டார்கள். ஏனெனில், இந்த நமது இந்து மதமும், சாஸ்திரமும், கடவுள்களும் அவர்களுக்காகப் பயன்படும்படியான முறையிலேயே கற்பிக்கப்பட்டு, அவர்களே அவற்றால் பயனடைந்து உலகில் உள்ள மனித சமூகத்திலேயே உயர்நிலையை அடைந்து வாழ்ந்து வருவதால் இன்று பார்ப்பனர் ஒழிவதா - ஜாதி ஒழிவதா என்கின்ற நிலையில் நம்முயற்சி இருந்து வருகிறது.*

*பார்ப்பனர் ஒழிந்தால், ஜாதியும் மதமும் கடவுளும் ஒழிந்ததென்றே சொல்லலாம்; ஜாதியும் மதமும் கடவுளும் ஒழிந்தால், பார்ப்பனர்கள் ஒழிந்தார்கள் என்றே சொல்லலாம்; இவ்வளவு ஏன்? ஜாதி ஒழிந்தாலே பார்ப்பனர்கள் ஒழிந்தார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதனால்தான் சுயமரியாதை இயக்கமும் ஜஸ்டிஸ் கட்சியும் பார்ப்பனர்களுக்கே இவ்வளவு பயங்கரமான எதிரிகளாய்க் காணப்படுகின்றன.*

**– சென்னை சுயமரியாதைச் சங்கம் விழாவில் பெரியார் ஈ.வெ.ரா. பேச்சு, “குடிஅரசு”, 19.01.1936.**

*தாழ்த்தப்பட்ட மக்களை, அவர்களுக்கு மற்றவர்கள் இழைத்து வரும் கொடுமையில் இருந்து விடுதலை செய்யவேண்டும் என்பதை உண்மையான கருத்துடன் பார்த்தால் அது ஒரு புரட்சி வேலையே ஆகும். ஏனெனில், தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை* **ஒரு பெரிய அஸ்திவாரத்தின் மீதே கட்டப்பட்டிருக்கின்றது.**

*எப்படி என்றால், தாழ்த்தப்பட்ட மக்கள், கீழ்ஜாதி மக்கள், தீண்டப்படாதவர்கள் என்பவர்கள் எல்லாம் பிறவியிலேயே கீழ்மைத் தன்மை அடைந்தவர்கள் என்றும், அவர்கள் கடவுள்களாலேயே அந்தப்படி பிறப்பிக்கப்பட்டவர்கள் என்றும், அதற்கு மதங்களும் மத சாஸ்திரங்களுமே ஆதாரங்கள் என்றும், கடவுள் செயலையோ மத விதிகளையோ யாரும் மாற்றக்கூடாதென்றும், அவை மாற்றுதலுக்குக் கட்டுப்பட்டதல்லவென்றும் சொல்லப்படக்கூடிய ஒரு பலமான அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட்டிருக்கிறது.*

*தாழ்த்தப்பட்ட மக்கள் சமத்துவம் பெறுவதும், தீண்டாமைத் தத்துவம் மனித சமூகத்தில் இருந்து விலக்கப்படுவதும் வெறும் வாய் வார்த்தையாலோ, பிரசாரத்தினாலோ, மேல் ஜாதிக்காரர்களைக் கேட்டுக் கொள்ளுவதினாலோ ஆகக்கூடிய காரியம் என்று யாராவது நினைத்தால் அவர்களது வாழ்வு வீண் வாழ்வு என்றுதான் சொல்வேன்.*

*தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டப்படாதவர்கள் என்பவர்களில் சிலர் தாங்கள் ஏதோ குளித்து முழுகிவிட்டு, விபூதிப் பூச்சோ, பட்டை நாமமோ விதிப்படி அணிந்து வைதீகர்கள் போல் வேஷம் போட்டுக் கொண்டு, மது, மாம்சம் சாப்பிடுவதில்லை என்று சொல்லிக் கொண்டு "சுவாமி" என்று பெயர் வைத்துக் கொண்டு திரிந்தால், தங்கள் நிலை உயர்ந்து விடும் என்றும், தீண்டாமை ஒழிந்துவிடும் என்றும் கருதி இருக்கிறார்கள். இது மற்றவர்களை ஏமாற்ற நினைத்துத் தங்களையே ஏமாற்றிக் கொள்ளும் பைத்தியக்காரத்தனமேயாகும்.*

*இந்தப்படி வெகுபேர் தாழ்த்தப்பட்ட மக்களில், ஆதிதிராவிடர்களில் வெகுகாலமாகவே வேஷம் போட்டுப் பார்த்தாய்விட்டது. அதற்கு பல புராண, சரித்திர ஆதாரங்கள் உண்டு. ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பு இருந்து, நாளது வரை தீண்டாமை விலக்கு விஷயத்தில் ஒரு காரியமும் முடிந்ததில்லை என்று தைரியமாய்ச் சொல்லலாம்.*

ஏதோ சில பாஷாண்டிகள் செய்த காரியங்களால் தங்கள் சுயநலத்துக்குப்பயன் ஏற்படுத்திக்கொள்ளத்தான் முடிந்திருக்குமே ஒழிய, அப்படிப்பட்ட வேஷத்தாலும் பக்தியாலும் காரியத்தில் ஏதும் ஆகி இருக்காது.

ஆகவே, கடவுளும் மதமும், அதற்கு ஆதாரமான கீதையும் மனுதர்ம சாஸ்திரமும் காப்பாற்றப்படுவதாய் இருந்தால், சூத்திரப்பட்டமும் கீழ்ஜாதித் தன்மையும் எப்படி மாற்றப்பட முடியும் என்று யோசித்துப் பாருங்கள்.

இன்று தீண்டாமை விலக்கு வேலையிலும், ஜாதி வித்தியாசம் ஒழிப்பு வேலையிலும் ஈடுபட்டிருப்பவர்களில் 100க்கு 100 பேரும் கீதை மனுதர்ம சாஸ்திரம் ஆகியவற்றை நம்பும் - ஆதரிக்கும் சோணகிரிகளேயாவார்கள்.

இவர்கள் எவ்வளவு நாளைக்குப் பாடுபட்டாலும் அடியற்ற ஓட்டைக் குடத்தில் தண்ணீர் இறைக்கும் மூடர்களுக்கு ஒப்பானவர்களேயாவார்கள்.

ஆகவே, தீண்டாமை ஒழிப்புக்கோ, ஜாதி ஒழிப்புக்கோ நீங்கள் முதலில் உங்கள் மதத்தை ஒழித்தாக வேண்டும். மதத்தை ஒழிக்க உங்களால் முடியவில்லையானால் மதத்தைவிட்டு நீங்களாவது விலகி ஆக வேண்டும். உங்கள் மதம் போகாமல் ஒரு நாளும் உங்களது தீண்டாமைத் தன்மையோ, பறத்தன்மையோ ஒழியவே ஒழியாது என்பது கல்லுப் போன்ற உறுதி.

உதாரணம் வேண்டுமானால், இதுவரையில் தீண்டப்படாதவர்களாயிருந்து மனித சமூகத்தில் தீண்டக் கூடியவர்களாக ஆன எவரும், தீண்டப்படாதவர்களாய் இருந்தபோது அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த மதத்தை உதறித் தள்ளிவிட்ட பின்புதான் தீண்டத்தக்கவர்கள் ஆகி இருக்கிறார்கள். இதற்கு கோடிக்கணக்கான மக்களை ஊர்ப் பெயருடன் புள்ளி விவரத்தோடு காட்டலாம்.

ஆதலால், மதத்தைக் காப்பாற்றிக் கொண்டு தீண்டாமையை விலக்கி விடலாம் என்று நினைத்து ஏமாற்றமடையாதீர்கள்.

**– சீர்காழியில் 10.7.1935இல் சொற்பொழிவு,**
**‘குடிஅரசு’, 23.07.1935**

◆

# 5

# உடன் உண்ணல் (சமபந்தி போஜனம்) என்ற உரிமைப் போர்

எமதருமை மாணவச் செல்வங்களே, பட்டம் பெற்று வேலை வாய்ப்பு பெற்ற இளைஞர்களே, வேலை கிட்டாதா என்று ஏங்கும் தோழர்களே, சொந்தப் பணமோ, பெற்றோர் தந்த பணமோ, ஓட்டல் கடைக்கு சென்று நண்பர்களுடன் உல்லாசமாக உட்கார்ந்து, ஒய்யாரமாக ‘அரட்டைக் கச்சேரி’யும் நடத்தி அனைவரும் அவர்கள் ஜாதி, மதம், பாலியல் பாகுபாடுமின்றி உணவருந்தும் வழமை உள்ள திராவிட தமிழ் வாலிபர்களே!

5 நட்சத்திர உணவு விடுதி முதல் வீதிகளில் அமைந்த எளிய உணவு விடுதிகள் வரையில் இன்று எங்கும் பேதாபேதமின்றி, எல்லோரும் ஒன்றாக உடன் அமர்ந்து உண்டு மகிழ்ந்து, உண்டாட்டத்தில் கொண்டாட்டமே கருதி குதூகலித்து மகிழும் நண்பர்களே!

ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஏன் அதற்கும்கூடக் குறைவான காலத்திலேயே அனைத்து ஜாதியினரும் பொது உணவு விடுதிகளான ஓட்டல்களில் ஒன்றாக அமர்ந்து உண்ணும் நிலை உரிமை இருந்ததா?

வர்ணாசிரம சட்டத்தால் பாதுகாக்கப்பட்டு, சமுதாயத்தில் இன்னமும் ஜாதி என்னும் விலங்குகள், பலரது கைகளில் தெரியாவிட்டாலும், மூளையில் போட்டுப் பூட்டி விட்டு, ஜாதி வெறித்தன போதையில் அவர்களைத் தள்ளாட வைத்துள்ள நிலையில், அன்று மக்கள் அனைவரும் சமமாக அமர்ந்து உடன் உண்ணல் என்ற சமத்துவ உரிமையை அவர்களுக்கு அளித்ததா? இல்லை, இல்லவே இல்லை என்பதுதான் திட்டவட்டமான பதிலாகும்.

*இந்த உரிமை எப்படிக் கிடைத்தது?*

*இதோ ஒரு வரலாறு:*

*“ஆப்கானிஸ்தானத்தைவிட்டு ஆரியக் கூட்டம் கிளம்பி இந்தியாவுக்குள் நுழைந்தபோது, கூட வந்த பெண்கள் கம்மி. வரலாற்றுக் கண்ணோட்டதில், இங்கு வந்த ஆண்களின் எண்ணிக்கையோடு, பெண்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டால் அது புறக்கணிக்கத்தக்கதுதான்.*

*ஆரியர்கள் பெண்களைத்தான் விட்டுவிட்டு வந்தார்கள்*

*ஆனால் மனுஸ்மிருதியைக் கையோடு கொண்டு வந்தனர்.*

*“.... பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் என வேதம் வகுத்த சமூக நிலைகளை ‘மனு’ பிளவாக்கியது. கூடவே இவர்களைத் தாண்டி ‘சூத்திரர்கள்’ என்ற பிரிவினை உருவாக்கி, அவர்களை வெறும் வேலைக்காரர்களாக ஆக்கியது மனு. பிராமணனுக்குத் தவம், வேத அறிவு, ஞானம், விஞ்ஞானம் உள்பட 11 குணங்களை வகுத்த மனு சூத்திரனைப் பற்றி இப்படி எழுதியது.*

*“சூத்திரனுக்கு அறிவு கொடுக்காதே, தர்மோபதேசம் பண்ணாதே. சண்டை வந்தால் சூத்திரன் எந்தப் பக்கம் இருக்கிறானோ அந்தப் பக்கத்துக்கே தண்டனை கொடு. அவனை உதை” இப்படிப் பேசுகிறது மனு.*

**– அக்னி ஹோத்திரம் ராமானுஜதாத்தாச்சாரியார்**
**(‘இந்து மதம் எங்கே போகிறது’, பக். 20)**

*மனுதர்மத்தின்படி, சூத்திரன் அடிமை. அடிமைக்குக் கல்வி உரிமை, சொத்துரிமை, திருமண உரிமை... போன்ற பல மனித உரிமைகளில் சம உரிமை எதுவும் கிடையாது. அது மட்டுமா? பிறவி இழிவும் கூடத்தான்.*

*‘சூத்திரன்’ என்றாலே பார்ப்பான் வைப்பாட்டி மகன் என்று மனு அத்தியாயம் 8, சுலோகம் 415இல் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*கறுப்பர் வெள்ளையர் என்ற நிறவெறி, இனவெறி ஆதிக்கக் கொடுமை ஆட்சி புரியும் மக்களிடம் கூட இப்படி, ‘வைப்பாட்டி மகன், தாசி புத்திரன்’ என்ற பிறவி இழிவுத் தொற்று அவமானம் இணைந்திருப்பது உண்டா உலகில்? இல்லையே!*

*சாப்பிடுவதில்கூட* European Restaurant European Lavatory *என்று ரயில்வே ஸ்டேஷன்களில் தனித்தனியாக இருக்கும் சமூகக்*

கொடுமை அக்கிரமம் இருந்தது; ஆனால், இந்த நாட்டின் வர்ணாசிரம ஜாதியின் கொடுமை, ஒரு புறம் மானத்திற்குப் பங்கம், பறிமுதல், அவமானம்; மறுபுறம் சமத்துவமின்மை, அறிவுப் பறிமுதல்.

எந்த அளவு மோசமான உலகின் எங்கும் காண முடியாத அவலம் அருவருப்பான நிலை என்றால், காசு கொடுத்து உணவு விடுதிகளில் உண்ணும்போது கூட, அனைவரும் கலந்து உண்ணும் உரிமை கிடையாது. ஓட்டல்களில் **“பிராமணாளுக்குத் தனி இடம், சூத்திரர்களுக்கு – கீழ்ஜாதிக்காரர்களுக்கு தனி இடம்”** என்று பகிரங்கமாகவே **‘இடஒதுக்கீடு’ அறிவிப்புப் பலகை** தொங்கிய நிலையில் பல ஆண்டு காலம் தொடர்ந்தது.

ஒன்றாகப் படித்துப் பழக வேண்டிய பருவமான மாணவப் பருவத்தினருக்குக் கூட ஒன்றாக அமர்ந்து கலகலப்பாக மகிழ்ந்து உரையாடி உடன் உண்ணல் வாய்ப்பு மறுக்கப்பட்டது - 80, 90 ஆண்டுகளுக்கு முன்பு. அதன் விளைவே தந்தை பெரியார் காங்கிரசில் இருந்தபோது நடத்திய **சேரன்மாதேவி குருகுலப் போராட்டம்** (1924) “சமபந்தி போஜனம்“ என்ற உரிமைப் போரின் முதல் கட்டமாகும்! மனுவின் கொடுமையை நாட்டோர் புரிந்து கொள்ள வாய்ப்பு!

தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கம் தொடங்குவதற்கு முன்பே அவர் காந்தியாரைத் தலைவராக ஏற்று, காங்கிரசில் சேர்ந்து, கடுமையாக உழைத்த நிலையில்தான் சேரன்மாதேவி குருகுலப் போராட்டம் உடன் (சமமாக) உண்ணல் உரிமைப் போராட்டம் வெடித்தது!

பார்ப்பனர்கள் சாப்பிடும்போது சூத்திரர்கள் பார்க்கவே கூடாது; பார்த்தாலே தீட்டுப்பட்டுவிடும் என்று கூறும் மனுதர்மம் தான் இந்தக் கொடுமைக்கு மூலசனாதனச் சம்பிரதாயக் கட்டளையாகும்.

**இதோ, மனுவின் சுலோகம் படியுங்கள்**

“பன்றி மோத்தலினாலும், கோழிச் சிறகின் காற்றினாலும்
நாய் பார்வையினாலும், சூத்திரன் தொடுதலாலும்
பதார்த்தம் அசுத்தமாகின்றது“
(மனு 3ஆவது அத்தியாயம், 241ஆவது சுலோகம்)

“சண்டாளன் , ஊர்ப்பன்றி, கோழி, நாய்

*மாதவிடாயான ஸ்திரீ பேடி இவர்கள் பிராமணர்கள் புசிக்கும் போது பாராமலிருக்கும்படி செய்ய வேண்டியது“ (மனு 3ஆவது அத்தியாயம், 239ஆவது சுலோகம்)*

*நாலாஞ் ஜாதி, அய்ந்தாம் ஜாதி (உழைக்கும் மக்கள்)யினர் பன்றி, நாய், கோழி இவற்றைவிடவும் மிகவும் கேவலமானவர்கள் என்றே எழுதி வைக்கப்பட்டிருப்பதைக் காலம் காலமாக ஹிந்து சனாதனம் கடைப் பிடித்ததன் தீய விளைவுதான் தேசிய குருகுலம் என்று பலஜாதிப் பிள்ளைகளைச் சேர்ந்த குருகுலத்தில் வ.வே.சு. அய்யர் என்ற பார்ப்பனர், பார்ப்பனப் பிள்ளைகளுக்கு தனிச் சாப்பாடு, உயர்தரச் சாப்பாடு; பார்ப்பனரல்லாதாருக்குத் தனிவரிசை, அதுவும் வெளியில் திண்ணையில் என்ற கொடுமையை அறிந்ததும், அன்று தமிழ்நாடு காங்கிரசின் தலைவர், செயலாளராக இருந்த பார்ப்பனரல்லாத தலைவர்களான தந்தை பெரியார், டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு, திரு.வி.கல்யாண சுந்தர முதலியார் முதலிய பார்ப்பனரல்லாத காங்கிரஸ் தலைவர்கள் இதனைக் கடுமையாக எதிர்த்தனர்!*

*ஆனால், இதனை ஆதரிக்க வேண்டிய முற்போக்கு பிராமணர்கள் என்று கூறப்பட்ட நிலையில் சி.ராஜகோபாலாச் சாரியார் (ராஜாஜி), சத்திய மூர்த்தி அய்யர், டி.எஸ்.எஸ். ராஜன் அய்யங்கார் போன்ற பார்ப்பனர்கள் அவர்களுக்குள் பல கோஷ்டியாக இருந்த நிலையில்கூட, இதில்* **ஒன்றாக நின்று** *தமிழ் தலைவர் டாக்டர் வரதராஜுலு நாயுடு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தனர். தந்தை பெரியார் அதனைத் தோற்கடிக்கச் செய்தார். குருகுலம் நடத்திய வ.வே.சு. அய்யர் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராகப் புரட்சி நடத்தியவர் என்று புகழப்படுபவர். தான் தொடங்கிய தேசிய குருகுலத்தில் இப்படி பார்ப்பனரல்லாத மாணவர்களும், பார்ப்பன மாணவர்களும் உடன் அமர்ந்து உண்ணலை ஏற்படுத்தாமையை நியாயப்படுத்திப் பேசினார்.*

*சேரன்மாதேவி குருகுலப் பிரச்சினை காந்தியாரின் மத்தியஸ்திற்கு அப்போது எடுத்துச் செல்லப்பட்டது. அவர் கூறிய தீர்ப்பு என்ன தெரியுமா? ஒன்றாக உண்ணலாம். ஆனால் “பிராமண சமையல்காரர் பரிமாறுபவர் தான் இருக்க வேண்டும்“ என்று மீண்டும் ஜாதி உயர்வுக்கு ஒரு புதுவாய்ப்பைக் கொடுத்தார்.*

இதை டாக்டர் பி.வரதராஜுலு நாயுடுவோ, தந்தை பெரியாரோ ஏற்க மறுத்துவிட்டனர்.

அப்போது காங்கிரசில் இருந்தபோதே (1924இல்) சேலத்தில் ஒரு (காங்கிரஸ்) பொதுக்கூட்டத்தில் பேசிய தந்தை பெரியார் கூறினார்.

“Speaking at a public meeting at Salem, E.V.Ramasami Naicker said they must settle the Brahmin question even while the British Supremacy lasted. Otherwise they would have to suffer under to tyranny of what he called “Brahminocracy” - A Hundred years of the Hindu, Page 337.

இதன் தமிழாக்கம்:

இந்த விவாதத்திற்குரிய பிரச்சினை - ஜாதி வேறுபாடு பார்ப்பன ஆதிக்கப் பிரச்சினை பிரிட்டிசார் (ஆட்சி) அதிகாரம் இருக்கும்போது ஒரு வகையாகத் தீர்க்கப்பட்டாக வேண்டும்; இல்லையேல் “பார்ப்பன நாயக“த்தின் கீழ் வருங்காலத்தில் தாங்கள் துன்பப்படும் நிலை ஏற்படும். (கவனிக்க: ஒரு புது ஆங்கில வார்த்தையை பெரியார் உருவாக்கித் தந்தார் பிராமினோகிரசி Brahminocracy)

**- ‘இந்து’ இங்கிலீஷ் நாளேட்டின் நூற்றாண்டு மலர் 1989, பக்கம் 337**

சேரன்மாதேவி தேசிய குருகுலப் போராட்டத்தினால் அக்குருகுலமே நடைபெறவில்லை; சில மாதங்களில் குற்றாலம் அருவியில் குளிக்கையில் வ.வே.சு. அய்யரும் வழுக்கி விழுந்து மரணமுற்றார் என்பது வரலாறு!

அது மட்டுமா? ஒவ்வொரு ஆண்டும் மூன்று, நான்கு நாள்கள் நடைபெறும் அகில இந்திய காங்கிரஸ் மாநாடுகளில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளுக்கு ஒன்றாக அமர்ந்து உண்ணும் வாய்ப்பே கிடையாது. பார்ப்பனர்களுக்குத் தனிப் பந்தி; பார்ப்பனரல்லாதார்க்குத் தனி இடம் - தனிப் பகுதி என்கிற முறைதான் பல ஆண்டுகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. கேட்டால் அவரவர்களின் ஆச்சாரம், அனுஷ்டானம், சனாதனம் மதிக்கப்படுவதற்காகவே இந்த ஏற்பாடு என்று கூறின -தேசியம் பேசிய அகில இந்திய கட்சிகள்!

அந் நாளில் கம்யூனிஸ்ட் **கட்சியின் போராட்டங்களில்** கலந்து கொண்டவர்களுக்குக் கூட மகாராட்டிரத்தில் இந்த சமமாக அனைவரும் ஒன்றாக அமர்ந்து, ஒரே உணவு உண்ணல் ஏற்பாடு

*கிடையாது. பார்ப்பனர்களுக்குத் தனியாக ஓர் ஏற்பாடு, நம்பமுடிகிறதா?*

*எஸ்.வி.ராஜதுரை கீதா எழுதிய* **“பெரியார்–சுயமரியாதை–சமதர்மம்”** *என்னும் நூலில் (பக்கம் 162) ‘குடிஅரசின்’ 06.09.1931 தலையங்கத்திலிருந்து ஒரு பகுதியில் சுட்டிக் காட்டுகிறார்கள்.*

*“சுயமரியாதை இயக்கம் தேசத் துரோகமானது என்று தேசியவாதிகள் செய்து வந்த பிரச்சாரம், வகுப்புரிமையைப் பயன்படுத்தி முன்னேற்றமடைந்த பார்ப்பனரல்லாதார் செய்த துரோகம் ஆகியவற்றை முறியடித்து வகுப்புவாரி உரிமை, உள்ளூராட்சிகளில் தாழ்த்தப்பட்டோருக்கும் பெண்களுக்கும் பிரதிநிதித்துவம் ஆகியவற்றை நிலை நிறுத்துவதில் வெற்றி பெற்றுவிட்டது.* **ஜாதி ஆணவம், அகம்பாவம் ஆகியவை நாட்டில் குறைந்து வந்துள்ளன. பார்ப்பனர் உள்பட எல்லா ஜாதி மக்களும் இன்று கூச்சமில்லாமல் சேர்ந்துண்ண முடிகிறது. ஈரோடு சுயமரியாதை மகாநாட்டிலும், விருதுநகர் சுயமரியாதை மகாநாட்டிலும் ஆயிரக்கணக்கான மக்கள் ஒரே பந்தியில் சமமாக உட்கார்ந்து சாப்பிட்டதை (1930, 1931) இயக்க எதிரிகளும் கூட இருந்து பார்த்துக்கொண்டுதான் இருந்தார்கள். எவ்வித ஒளிவுமறைவுமில்லாமல் – பார்ப்பனரல்லாத, சைவர்கள் அல்லாத – “நாடார்கள்” சமையல் செய்தார்கள். ஈரோட்டில் “பறையர்கள்” முதல் எல்லா ஜாதியினரும் எல்லா மதக்காரரும் பரிமாறினார்கள்.**

*(எந்த அரசியல் மாநாட்டிலும் (அன்று அரசியல் மாநாடு என்று சொல்லப்பட்டு வந்தவை காங்கிரஸ் மாநாடுகளாகும். – எஸ்.வி.ஆர். அடிக்குறிப்பு).*

**எந்த அரசியல் மாநாட்டிலும் “பார்ப்பனரல்லாதார்” சமையல் செய்தோ, “தீண்டாத ஜாதியார்” பரிமாறியதோ, பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதார் எல்லோரும் ஒரே பந்தியில் இருந்து சாப்பிட ஏற்பாடு செய்ததோ இதுவரை நாம் அறிந்து நடந்ததேயில்லை.”**

*இதன் கீழ் எஸ்.வி.ஆர் கீதா எழுதியுள்ள ஓர் அடிக்குறிப்பு மிகவும் கவனத்திற்குரிய செய்தியாகும்.*

*“இந்தியாவின் துவக்க கால கம்யூனிஸ்ட்டுகளில் ஒருவரும், பம்பாய் தொழிற்சங்கத் தலைவருமான ஜோக்லேகர் 1927 டிசம்பர் 30இல் சென்னையில் நடந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செயற்குழு கண்டனத்திற்குப் பிறகே* **“பிராமண சபா”** *உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார்.*

*1928இல் பம்பாயில் நடந்த தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தின்போது, கம்யூனிஸ்ட் தொழிற் சங்கத் தலைவர் மிராஜ்கர், பம்பாய் நகராட்சியானது சோறும் குழம்பும் சமைக்க ஒரு பார்ப்பன சமையல்காரரை அமர்த்தப் போகின்றது என்றும், அவர் சமைத்த உணவுதான் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார்.*

*ஜோக்லேக்கரோ ஒருபடி மேலே சென்று சமைக்காத உணவுப் பொருள்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று கோரினார். ஏனெனில், மற்றவர்கள் சமைத்ததைச் சாப்பிடாத "பய்யாக்களும்" அதாவது மேல் ஜாதிக்காரர்களும் இங்கு இருக்கிறார்கள்.* **நாங்களும் கூட மற்ற ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் தயாரிக்கும் உணவைச் சாப்பிடுவதில்லை.** *எனவே, அவர்கள் (நகராட்சி நிருவாகம்) எங்களுக்கு அரிசியை மட்டும் கொடுக்கட்டும். எங்களுக்கான முறையில் நாங்களே சமைத்துக் கொள்கிறோம்.* (SJI170) *வேலை நிறுத்தப் போராட்டத்தின் போதும் அத்தலைவர்கள் ஜாதிய நெறிமுறைகளுக்குக் கட்டுப்பட்டே இருந்தனர். ஜாதி ஒழிப்பு என்பது கம்யூனிஸ்ட் கட்சிக் கொள்கைத் திட்டத்தில் இடம் பெற்றதே இல்லை" (பக்கம் 162).*

*(இன்று நிலைமை வெகுவாக மாற்றம். அனைத்து அகில இந்திய கட்சிகளிலும் மாறியுள்ளது. முதலில் அதற்கு வழி திறந்தது சுயமரியாதை இயக்கமும் தந்தை பெரியாருமே!)*

*இப்படி உடன் அமர்ந்து உண்ணும் ஜாதி பேதமற்ற நிலையை ஏற்படுத்த தீண்டாமை, பார்க்காமை, நெருங்காமை உடன் உண்ணாமை என்ற அந்த நோய் எங்கே எந்த ரூபத்திலிருந்தாலும் தந்தை பெரியார் தனது மனித உரிமை, சமத்துவப் போரை அறப்போரைத் தொடங்கவே செய்தார்!*

*காங்கிரஸ் மாநாடுகளில் அந்நாளில் எல்லா ஜாதியினரும் சமபந்தி போஜனம் செய்ய அனுமதிப்பதில்லை என்பதைவிட, தப்பித்தவறி யாராவது தெரிந்தோ தெரியாமலோ அந்த மாநாட்டு பந்தியில் அமர்ந்து சாப்பிட்டால் என்ன கொடுமை நடக்கும் நடந்தது என்றதற்கு 1937 இல் தஞ்சை மாவட்டம்* **நீடாமங்கலத்தில்** *காங்கிரஸ் மாநாட்டில் நடைபெற்ற ஒரு கொடுமை ரத்தக்களரி வரவழைக்கும் கொடுமையாகும்!*

*(இதுபற்றி திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் நீலகண்டன் அவர்கள்*

ஓர் ஆராய்ச்சித் தரவுகளைத் தேடிப் பிடித்து அருமையான நூல் ஒன்றையே எழுதியுள்ளார்!

23.12.1937 நீடாமங்கலத்தில் (இன்றைக்குத் திருவாரூர் மாவட்டம்) தென் தஞ்சை மாவட்ட மூன்றாவது அரசியல் சட்ட மாநாட்டின் முற்பகல் நடவடிக்கைக்குப் பின் "சமபந்தி போஜனம்" நடைபெற்றது. அதில் ஆதிதிராவிடர்கள் போஜனம் அருந்தினார்கள். ஆதிதிராவிடர்கள் மூவர் அந்தப் பகுதியில் அமர்ந்து சாப்பிடுகிறார்கள் என்ற செய்தி தெரிந்த உடனே காங்கிரஸ் பிராமணர்களின் பக்தரான டி.கே.பி.சந்தான இராமசாமி உடையார் என்ற காங்கிரஸ் பெரிய மிராசுதார், தனது ஏஜெண்ட் சபாபதி உடையாரை ஏவி, சாப்பிட்டுக் கொண்டிருந்த ஆதிதிராவிடர்களை வெளியேற்றி விசாரிக்க உத்தரவிட்டார். அந்த இடத்திலேயே சாப்பிட்டுக் கொண்டிருந்த ஆதிதிராவிடத் தோழர்கள் செம்மையாக அடித்து வெளியேற்றப்பட்டார்கள்.

அவ்விடம் வந்திருந்த போலீஸ் தலைமை அதிகாரி சமாதானம் செய்து வெளியேற்றி விட்டார்.

அதில் ஓர் ஆதிதிராவிடத் தோழர் அடிதாங்க முடியாமல் பக்கத்திலிருந்த வெண்ணாற்றில் விழுந்து அக்கரை ஏறி ஓடினார்!

அதோடு விவகாரம் முடிந்துவிடவில்லை. வரவேற்புக் கமிட்டித் தலைவர் புது தேசபக்தர் சந்தான இராமசாமி உடையார் சமபந்தி' விருந்தில் கலந்து போஜனம் அருந்திய ஆதிதிராவிடர்கள், அனுமந்தபுரம் அய்யர் பங்களா ஆள்கள் என்று விசாரித்துத் தெரிந்ததும் அய்யர் அவர்களுக்கு இந்தச் செய்தியைத் தெரிவித்தார் - அனுமந்தபுரம் பண்ணை ஏஜெண்ட் கிருஷ்ணமூர்த்தி அய்யர். மறுநாள் காலையில் மாநாட்டில் சாப்பிட்ட அந்த "ஆதிதிராவிடத் தோழர்களைக் கொண்டு வந்து கட்டிப்போட்டு, தலையை மொட்டை அடித்து, சாணிப்பால் போட்டு செம்மையாக அடித்து, கரும்புள்ளி செம்புள்ளி குத்தி சில கொடுமைகளைச் செய்தனர்.

அவர்களது தேசபக்தி இது! இதனை அன்று நமது இயக்கத்தவரான முதுபெரும் பெரியார் பெருந்தொண்டர் நீடாமங்கலம் அ.ஆறுமுகம் அவர்கள் 'குடி அரசு' ஏட்டுக்கு எழுதி படம் பிடித்தனுப்பி பெரிய அளவில் கண்டனம் தெரிவித்தார், அவர்கள், இவர்கள் மீதும், இயக்கத்தின் மீதும் வழக்குப் போட்டு

தஞ்சையில் நடந்த இவ்வழக்கில் சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் வாதாடி வெற்றியைப் பெற்றுத் தந்தார்.

மொட்டை அடிக்கப்பட்ட ஆதி திராவிட தோழர்கள்:

1. "பள்ளப்பரியாரி" கதிர்வேல் மகன் ஆறுமுகம்
2. முக்கட்டை வேளாங்கண்ணி மகன் தபஸ்ராயன் என்கிற தேவசகாயம்
3. பட்டி அருளானந்தம் மகன் சூசை ரத்தினம்

**– தகவல் 'விடுதலை', 03.01.1938**

எவ்வளவு ஈவிரக்கமற்ற கொடூரம். சமபந்தியா அது? சுயமரியாதை இயக்கப் போராட்டம் நடந்த பிறகே விடியல்!

ரயில்வே அப்போது தனி வாரியம். தனியார் நிருவாகத்திலிருந்த ஒன்று. அங்கே இருந்த உணவுச் சாலைகளிலும் இப்படி ஜாதி வித்தியாசமான தனியே ஜாதி அடிப்படையில் உண்ணும் முறை பலகாலம் பயன்பாட்டிலிருந்ததை அறிந்து, 1940இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் முடிவில், இதற்கென ஒரு தனிப் போராட்டம் – ரயில்வே நிருவாகக் கம்பெனியார் மாற்றா விட்டால் நடத்தப் போவதாக அறிவிப்புக் கொடுத்தார்.

போராட்டத்திற்கும் ஆயத்தமானார். இயக்கத் தோழர்களும் களத்தில் குதிக்கத் தயார் நிலையில் இருந்தனர்.

சர்.ஏ. இராமசாமி (முதலியார்) அவர் அதிகாரப் பொறுப்பில் இருந்தவர். அந்த ரயில்வே கம்பெனியார்களிடம் தந்தை பெரியார் போராட விருப்பதை அறிவித்து, அவர்கள் தாமாகவே முன்வந்து அந்தப் பேதங்கள் – தனித்தனி இடங்கள் என்ற ஏற்பாட்டை – ஒழித்துவிடுவது நல்லது என்று அறிவுறுத்தியதை அக்கம்பெனிகள் ஏற்று, அனைவரும் ஒரே மாதிரி சமமாக அந்த உணவுச் சாலைகளில் அமர்ந்து சாப்பிடும் சமத்துவ ஏற்பாட்டை ஏற்றனர்.

போர்க்களம் போகாமலேயே, போராடி வெற்றி பெற்று சமத்துவத்தை நிலைநாட்டினார் – உண்ணலில், நம் உன்னதத் தலைவர்!

என்றாலும் பார்ப்பனரின் வர்ணதர்ம ஆதிக்கக் கொடி சிற்சில இடங்களில் பறக்கவே செய்தது!

ஆனால், தந்தை பெரியாரின் பருந்துப் பார்வையிலிருந்து அவை தப்ப முடியுமா?

*1941இல் மனிதர் அனைவரும் சமம் என்ற மனித உரிமைப் போரின் புதுக்களம் அவருக்குத் தென்பட்டது.*

*தஞ்சை மாவட்டம் திருவையாறு என்ற (பார்ப்பனர் ஆதிக்கம் நிறைந்த) ஊரில் நடந்த ஒரு நிகழ்வு. இரண்டாவது குரு குலப்போராட்டம் நடத்த வேண்டிய அவசியத்தை தந்தை பெரியார் மீதும், சுயமரியாதை இயக்கம், திராவிடர் இயக்கத்தின் மீதும் திணித்தது!*

*அப்போது தந்தை பெரியார் 29.01.1941இல் ஆவேசம் கொப்பளிக்க 'விடுதலை'யில் எழுதிய தலையங்க அறிக்கை இதோ:*

*"தமிழரே! ரோஷ, மான உணர்ச்சி உமக்கு உண்டா இல்லையா என்பதை சோதிக்க ஓர் சம்பவம் வந்திருக்கிறது.*

*சமத்துவம் கோருவோரே! உமது கொள்கையைக் கொலை செய்யத் துணிந்து, உமது போரிடும் சுபாவத்தைப் பரீட்சிக்க ஒரு சம்பவம் ஏற்பட்டிருக்கிறது.*

*தேசியம் பேசுவோரே! எல்லாரும் பாரத மாதா மக்கள்; இதில் பிராமணர், பிராமணரல்லாதார் என்று பேதம் பேசவேண்டாம் என்று மேடைகளில் பேசுகிறீர்களே! அது நடைமுறையில் இல்லை என்பதைக் காட்டி அதை நடைமுறையில் இருக்கச் செய்யும் துணிவு, நாணயம், உமக்கு உண்டா என்று கேட்டு உங்களை எடை போட சமயம் வந்திருக்கிறது.*

*இந்து மகாசபை சூரர்காள்! சிந்துவிலே அக்ரமம் என சோர்ந்துவிடும் சூரர்களே! இந்து ராஜ்யம் தேவை என்று முழக்கி, இந்துக்கள் எல்லோரும் ஒரு குல மக்கள், பேதமில்லை என்று பேசுகிறீர்களே! இதோ, உமது சொல்லுக்கு நேர் மாறாக செயல் ஒன்று நடக்கிறது. உமது வீரத்தை உறைத்துக் காட்ட சமயம் வந்திருக்கிறது.*

*சைவ வைணவர்களே! நீறும் நாமமும் நிலைத்திருக்க இன்பமும் பேறும் நிலைக்கும் என்றும், அன்பே சிவம் என்றும், தொழு நோயாயினும் அவனடி தொழுவோர் எமது குரு என்றும் பாடும் சைவ வைணவர்களே! அன்பு இல்லாத காரியம் நடக்கிறது. அதைத் தடுக்க உமது "தீரம்" எப்படி உபயோகமாகிறது பார்ப்போம். அதற்கோர் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது!*

*குருகுலப்போர் வீரர்களே! காங்கிரசின் பெயர் கூறி, பணம் வசூலித்து வ.வே.சு. அய்யர் நடத்திய குரு குலத்திலே, ஜாதி பேதம் காட்டப்பட்டபோது, போரிட்ட வீரர்களே! அது போலவே இது போதும் வீரம் மங்காது இருக்கிறதா என்று பரீட்சிக்க சமயம் வந்திருக்கிறது.*

*மாணவர்களே! தீவிரவாதம், சமதர்மம், உரிமைப்போர் என எக்காளம் இடுகிறீரே, ஜாதி பேதம், வர்ணாஸ்ரமம், தலை விரித்து ஆடுகிறது. இதனை அடக்க உமக்கு தைரியம் உண்டா என்பதை ஊரார் அறியக் காட்ட ஒப்பற்ற சமயம் வந்திருக்கிறது!*

*பத்திரிகைக்காரர்களே! அபிசீனிய மன்னருக்கு ஆதரவு, சீனா நிலைமை கண்டு சிந்தை நோவது, முதலியன எழுதி உமது விரிந்த மனப்பான்மையைக் காட்டிக் கொள்கிறீர்களே! குறுகிய, கோணிய, கொடிய மனப்பான்மையின் பயனாக ஒரு கோரச் செயல் நடக்கிறது. அச்சமற்ற கண்டனம் எழுதும் பேனா உம்மிடம் இருக்கிறதா என்றபரீட்சைக்குசமயம்நேரிட்டிருக்கிறது.*

*நாடி முத்துவின் நண்பர்களே! சிறை சென்றுள்ள தோழர் முத்துப்பிள்ளையின் உத்தரவை மதிக்க மறுக்கும் மதோன் மத்தர்களுக்குத்தக்கபாடம்கற்பிப்பதே அவருடைய நண்பர்களின் கடமை. கடமையைச் செய்து காட்ட சமயம் வந்திருக்கிறது.*

*என்ன பரீட்சை! என்ன சமயம்!"*

*நாம் அனைவரும் சமம் என்று ஆயிரமாயிரம் மேடைகளிலே பேசுகின்றனர். ஆரியர், திராவிடர் என்ற பாகுபாடு கூட இல்லை, அது அர்த்தமற்ற கூச்சல் என்று ஆர்ப்பரிக்கின்றனர். ஆனால் நாமோ சிறுத்தையின் தோலின் மீதுள்ள புள்ளியும் மறையாது, பார்ப்பனரின் ஜாதித் திமிரும், அழித்தாலன்றி அடங்காது என்று கூறுகிறோம்.*

*தஞ்சை ஜில்லா திருவையாறு என்ற ஊரிலே, தஞ்சை மன்னன் மான்யத்தைப் பெற்று சமஸ்கிருத காலேஜ் ஒன்று நடந்து வருகிறது. தஞ்சை ஜில்லா போர்டின் ஆட்சிக்கு உட்பட்ட காலேஜ். அங்கு சமஸ்கிருத போதனை மட்டுமே முன்னம் இருந்தது. மறைந்த திராவிடமணி சர். பன்னீர்செல்வம் தஞ்சை ஜில்லா போர்டு தலைவராக இருந்தபோது, அதிலே தமிழும் போதிக்க உத்தரவிட்டார். அக்கிரகாரம் சீறிற்று, அவர்*

*அஞ்சவில்லை.* **டிசம்பர் மாதம் 2ஆம் தேதி தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் தோழர் நாடிமுத்துப்பிள்ளை, மேற்படி காலேஜிலுள்ள ஹாஸ்டலில், ஜாதிபேதம் கூடாது என்று கருதி, பிராமணரும் பிராமணரல்லாதாரும் ஒன்றாகவே சாப்பிடவேண்டும் என்ற தீர்மானத்தை ஜில்லா போர்டு கூட்டத்திலே நிறைவேற்றினார்.**

**அந்த தீர்மானம் ஜனவரி 27ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.**

**இந்த ஹாஸ்டலில், 70 பார்ப்பனரல்லாத மாணவர்களும் 45 பார்ப்பன மாணவர்களும் உள்ளனர்.**

*சமபந்தித் தீர்மானம் அமலுக்கு வந்ததும், இந்த 45 பார்ப்பன மாணவர்களும், ஜில்லா போர்டு தீர்மானத்தைக் கண்டித்து, ஹாஸ்டலில் சாப்பிட மறுத்துவிட்டனர். அக்கிரகாரத்திலே சென்று சாப்பிட்டார்கள். பார்ப்பனரும் பார்ப்பனரல்லாதாரும் சமமாக உட்கார்ந்து சாப்பிட வேண்டும் என்ற* **உத்தரவைக் கண்டு அக்கிரகாரம் பதறுகிறது, உறுமுகிறது.**

**இதன் கருத்து என்ன?** *பார்ப்பனர் இன்றும், தமிழரை விட மேலான ஜாதியார், தனியான ஜாதியார், என்ற திமிரான கருத்துடன் இருப்பதைத்தானே காட்டுகிறது? பார்ப்பனரல்லாதாருடன் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட் டால், தீட்டுப்பட்டுவிடும், இழிவு நேரிடும் என்று கருதும், வர்ணாஸ்ரம மனப்பான்மை இருப்பதைத்தானே காட்டுகிறது? பார்ப்பனரல்லாதாருடன் சேர இருந்து உண்டால், உணவு விஷமாகிவிடுமா? குடல் கருத்துவிடுமா? எது கெட்டுவிடும்?*

**தமிழரோடு சேர்ந்து உணவருந்த மறுக்கும் பார்ப்பன ஜாதித் திமிருக்கு, என்ன பாடம் கற்பிக்கப் போகிறீர்கள்? தமிழரே, உமது ரோஷம் பொங்கவில்லையா?** *வெட்கமும் 'துக்கமும் கிளம்பவில்லையா? நீங்களும் மனிதர்கள் தான் என்பதை ஒப்புக் கொள்ள மறுக்கும் பார்ப்பன ஜாதியின் பதற்றம் எப்போதுதான் தொலைவது! என்று நீங்கள் சுயமரியாதை பெறுவது? எண்ணுங்கள். ஆவன செய்யுங்கள்!* **(விடுதலை', 29.01.1941)**

*பார்ப்பன கும்பகோண மடத்தின் சங்கராச்சாரியார் (அவர்தான் பிறகு காஞ்சி சங்கராச்சாரியார் ஆனவர்). மூலவராக இருந்து, பிரபல படித்த வக்கீல், மேதைகளையெல்லாம் விட்டு எதிர்ப்பு காட்டி, ஜில்லா போராடியும் அந்த ஏற்பாட்டினை*

*மாற்றியதை ரத்து செய்து பழையபடியே பார்ப்பனர் - பார்ப்பனரல்லாத தனித்தனியே சாப்பிட வற்புறுத்தி ஓர் அணியிலே திரண்டனர்.*

*அது பற்றிய அந்நாளைய விடுதலையில்!*

*பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ளப் படை திரட்டப் புறப்பட்டுவிட்டனர். அவர்கள் படை, துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும் கொண்டு எதிரிகளுடன் போராடும்வீரப்படையல்ல; சாத்திரங்களையும்புராணங்களையும் கொண்டு பகுத்தறிவற்ற மக்களை அடிமைப்படுத்தித் தங்கள் ஜாதி உயர்வை நிலைநாட்ட முயலும் வஞ்சகப் படையேயாகும்.*

*இனியும் இந்த வஞ்சகப் படையின் மிரட்டல்களுக்கும், புரட்டுகளுக்கும் செவிசாய்த்துப் பொதுமக்கள் ஏமாறப் போகிறார்களா? என்பதே இப்பொழுது நமது கேள்வி.*

*தஞ்சை ஜில்லா போர்டில் சமபந்தி உணவை ஆதரித்துச் செய்த தீர்மானமே இந்த வஞ்சகப் படைக்கு வயிற்றெரிச்சலைக் கிளப்பிவிட்டது.*

*சமபந்தி உணவைக் கண்டித்துப் பிச்சைச் சோற்றை அதிகாரத்துடன் பெறப் பிறந்த சில வைதீகப் பித்துப் பிடித்த பார்ப்பனர்கள் வாய்விட்டு* **அலறினர். அந்த அலறல் இன்று தோழர்களான ரைட் ஆனரபில் சீனி வாச சாஸ்திரியார், சர்.பி.எஸ். சிவசாமி அய்யர், டி.ஆர். வெங்கட்டராமசாஸ்திரியார், ராவ்பகதூர் ஜி.எ.நடேசன், கே.வி. கிருஷ்ணசாமி அய்யர், கே. பாலசுப்பிரமணிய அய்யர், ஆர். முத்துசாமி அய்யர் போன்ற பார்ப்பனர்களையெல்லாம் வெளியில் இழுத்துவிட்டது.**

*இந்தப் பார்ப்பன சமூகப் பிரமுகர்களெல்லாம் சென்ற 06.04.1941 மயிலாப்பூர் ராணடே ஹாலில் ஒரு கூட்டம் கூடினர். இக்கூட்டத்தில் தலைமை வகித்தவர், பிரபல அரசியல்வாதியும், பலதடவை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சாரணராக மேல் நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்தவரும், எந்த வித்தியாசமும் பாராட்டாமல் எல்லோருடனும் கலந்து உட்கார்ந்து விருந்துண்பவரும், சமூகச் சீர்த்திருத்தத்தில் தனக்கு மிகவும் அக்கறையுண்டு என்று சொல்லிக் கொள்பவருமாகிய மகாகனந்தங்கிய, தோழர் சீனிவாச சாஸ்திரியார் அவர்கள்.*

*இவர் அக்கூட்டத்தில் சமூகச் சீர்த்திருத்தத்தைப் பற்றிப் பேசும்போது தன் சொந்தக் கருத்தென்று சில உண்மைகளைக் கூறினார்.*

*“ஜாதிவித்தியாசங்களை ஒழித்துவிட்டு,சமபந்திபோஜனத்துக்கு ஏற்பாடு செய்வது காலப்போக்கை முற்றிலும் அனுசரித்தது என்றும், எனவே அதைப் பின் பற்றுமாறு மக்களின் ஒரு பகுதியைக் கட்டாயப்படுத்துவதில் தீங்கு ஒன்றுமில்லையென்றும், இந்து சமூகம் எல்லாவகைகளிலும் ஒரே மாதிரியாகும் காலம் வருவதை இது துரிதப்படுத்துமென்றும் கூறப்படலாம். இது விரும்பத்தக்க லட்சியந்தான் என்பது என் சொந்த அபிப்பிராயம்“.*

*உண்மையில் இது அவருடைய சொந்த அபிப்பிராயமாக இருந்தால் அவரால் நம்பக்கூடிய அபிப்பிராயமாக இருந்தால் நாட்டுக்கு நன்மை தரக்கூடிய இந்த அபிப்பிராயத்திற்குப் பாடுபட முன்வருவதே நேர்மையும், ஆண்மையும், அறிவுடைமையும் ஆகும். ஆனால்,சொந்த அபிப்பிராயத்திற்கு மாறாக நடப்பதென்று சொன்னால், அதைப்பற்றி நாம் என்னதான் சொல்லுவது? தோழர் சாஸ்திரியார் மாத்திரம் இப்படியென்று சொல்லிவிட முடியாது. அவர்களுடைய ஜாதியே இம்மாதிரிதான். சொல் வேறாகவும் செய்கை வேறாகவும் இருந்து காரியங்களை நடத்திக் கொண்டு வருகிறது என்று சொல்லி விடும்படியான முடிவைச் சாஸ்திரியார் அவர்களின் பேச்சே ஏற்படுத்திவிட்டது.*

*அவர் அக்கூட்டத்தில்* **சமபந்தி உணவைக் கண்டித்துப் பேசியதைக் கவனிப்போம்.**

*“தீவிர மாறுதல்களைச் செய்ய சட்டம் இடங் கொடுப்பதாக வைத்துக் கொண்டாலும், இது யுத்தமா? தர்மமா? தர்மகர்த்தாப் பொறுப்பைச் சரிவர நிருவகிப்பதாகுமா? என்ற கேள்விகள் எழுகின்றன. இதைப் பற்றிச் சந்தேகமிருக்க முடியாது. பிடிவாதமாய் இந்தப் போக்கு அநுஷ்டிக்கப்படுமானால் பிராமணர்களுக்கு இந்த தர்மத்தின் பயன் இல்லாமற் போய்விடும்.*

*கட்டாய சமபந்தி போஜனத்தை ஏற்படுத்தியதன் உடனடியான விளைவு பிராமண மாணவர்கள் சாப்பாடு வசதிகளை இழக்கும்படியாக நிர்பந்தப்படுத்துவதுதான்.*

*பிராமணரல்லாத மாணவர்களுடன் பிராமண மாணவர்களும் சேர்ந்துதான் சாப்பிட வேண்டும், என்று கட்டாயப்படுத்துவதன் தவிர்க்க முடியாத விளைவு, பிராமண மாணவர்கள் வைதீக*

*வட்டாரங்களில் எக்காலத்திலும் சேர்க்கப்படுவதற்கு அவர்களை லாயக்கற்றவர்களாக்கிவிடும்.*

*எனவே, இந்த ஸ்தாபனத்தில் எந்தக் காரியத்துக்காக அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறதோ அதைச் செய்வதற்கு முடியாமற் போய்விடும்.''*

*மேற்கூறிய சொற்றொடர்கள், தோழர் சாஸ்திரியாரின் உள்ளத்தில் தோன்றி, வாய் வழியாக வெளிவந்ததென்பதில் சந்தேகமில்லை. நாம் மேலே எழுதியுள்ள வாக்கியங்கள் 'தினமணி'யில் வெளிவந்துள்ள செய்தியிலிருந்தே எடுத்தவை. ஆகவே இந்தக் கருத்துக்கும், முன் சொந்தக்கருத்து என்று அவர் கூறியதாக எடுத்துக் காட்டியிருக்கும் கருத்துக்கும் உள்ள வேறுபாட்டை நோக்குங்கள்.*

*பின்னால் நாம் எடுத்துக் காட்டியிருக்கும் தொடர்களில் உள்ள கருத்தை ஊன்றி நோக்கினால் பார்ப்பன சமுதாயத்தின் பேராசையும் ஆணவமும் இன்னவையென்று விளங்கும்.*

**பார்ப்பன மாணவர்கள் ஒருக்காலும் பார்ப்பனரல்லாத மாணவர்களுடன் உட்கார்ந்து சாப்பிட முடியாது.**

*பார்ப்பனரல்லாத மாணவர்களுடன் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடும் பார்ப்பன மாணவர்கள் ஜாதியை விட்டு நீக்கப்படுவார்கள்.*

**சமஸ்கிருதப் படிப்பே பார்ப்பனர்களின் உயர்வையும், வருணாசிரம தருமத்தையும் நிலைநாட்டவே காப்பாற்றப்படுகிறது.**

*என்ற கருத்துகள் தோழர் சாஸ்திரியாரின் வார்த்தைகளில் அடங்கிக் கிடக்கின்றன.*

*இந்தக் கருத்தை அவர் தாராளமாக வெளியிட்டதற்காகவும், மற்றும் பிரபல அரசியல் பார்ப்பனர்களும் சமூகச் சீர்த்திருத்தம் பேசும் பார்ப்பனர்களும், இதை மறுத்து ஒரு வார்த்தை கூட கூறாமலிருந்ததற்காகவும் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். ஏன்? இப்பொழுதாவது, பார்ப்பனரினும், ஜாதித் துவேஷமற்ற சமரசப் பார்ப்பனர்கள் உண்டு என்று கண்மூடித்தனமாக நம்பிக் கொண்டிருப்போர் யாராவதிருந்தால் அவர்கள் உண்மையை அறியக் கூடும் அல்லவா?*

*இந்தக் கூட்டத்திலேயே, சர்.பி.எஸ். சிவசாமி அய்யர் அவர்கள் தஞ்சை ஜில்லா போர்டு தீர்மானங்களைக் கண்டு*

*கவலைப்படுவதாகவும், அவற்றைக் கண்டிப்பதாகவும் ஒரு தீர்மானம் கொண்டு வந்து பேசியிருக்கிறார். அவர் பேசும் போது ஜாதியை ஒழிப்பது ஜில்லா போர்டின் கடமை அல்ல வென்றும், சமபந்தி போஜனத்தை ஏற்படுத்தியது அதிகாரத்தை மீறிய செயலாகும் என்றும் பேசியிருக்கிறார். இப்பெரியாருக்குத் தன்னுடைய ஜாதியின் உயர்வைக் காப்பாற்றுவதில் எவ்வளவு ஆத்திரமிருக்கிறது என்பதை இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.*

*சர்.பி.எஸ். சிவசாமி அய்யர் அவர்களின் தீர்மானத்தை ஆதரித்து இந்து மகாசபையைப் பற்றிப் பிரமாதமாகப் பிரச்சாரம் செய்துவரும் திவான் பகதூர் கே.எஸ். ராமசாமி சாஸ்திரியார் பேசியிருக்கிறார். இவர் தஞ்சை ஜில்லா போர்டின் செய்கை எதேச்சாதிகாரம் என்று கூறினாராம். இந்துக்களுக்குள் ஒற்றுமை உண்டாக வேண்டும்; ஜாதி வேற்றுமை ஒழிய வேண்டும்; கலப்பு மணம், சமபந்தி போஜனம் ஏற்பட வேண்டும்; என்ற கொள்கைகளை இந்து மகாசபை மறுக்கவில்லை. இவைகளை ஆதரித்து மதுரை மகாநாடு தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறது. இருந்தும் சாஸ்திரியாருடைய தனிப்பட்ட கருத்து ஜாதி பேதத்தை ஆதரிப்பதும், சமபந்தி போஜனத்தை எதிர்ப்பதும் போலும்!*

*இந்த அக்கிரகாரக் கூட்டத்தில், தோழர்களான,* **திவான் பகதூர் வி. மாசிலாமணிப்பிள்ளை, எம். பாலசுப்பிரமணிய முதலியார், எம். ராஜமன்னார் செட்டியார், ராவ்சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை யென்னும் தமிழ்ப் பண்டிதர் ஆகியவர்களும் சேர்ந்துகொண்டு, அவர்கள் செய்கையை ஆதரித்திருப்பதுதான் பார்ப்பனரல்லாதார் தலைகுனியத் தகுந்த செய்தி.**

*பார்ப்பனரல்லாதாருடன் உட்கார்ந்து சாப்பிடுவது இழிவானது என்று பார்ப்பனர் கூறுவதென்றால், பார்ப்பனரல்லாதாரை அவர்கள் என்ன ஜென்மம் என்று கருதுகிறார்கள் என்பதே நமக்கு விளங்கவில்லை. மக்களைக் காட்டிலும் இழிந்த பிறவி என்று சொல்லக்கூடிய மாடு, ஆடு, பூனை, எலி, பல்லி, நாய், ஈ, எறும்பு முதலியவைகள் பார்த்தாலும், வாய் வைத்தாலும் அந்த உணவைச் சாப்பிடத் துணியும் இவர்கள் மனிதராகிய பார்ப்பனரல்லாதார் பார்க்கும்படி சாப்பிடுவது அவ்வளவு இழிவானது என்றால், பார்ப்பனரல்லாதார் மேற்கூறிய பிராணிகளைக் காட்டிலும் இழிந்தவர்கள் என்பதுதானே அர்த்தம்? இந்த இழிவை மானமின்றிச் சகித்துக் கொண்டு*

*நிலைக்க வைக்க, படித்த அறிவுடைய பார்ப்பனரல்லாதார் சிலர் துணை செய்வார்களானால் அவர்களைப் பற்றி நாம் என்ன நினைப்பது?*

*ஜில்லா போர்டுத் தீர்மானங்களை ரத்துச் செய்யும்படி நம் கவர்னர் அவர்களிடம் விண்ணப்பித்துக் கொள்ள இக்கூட்டத்தினர் ஒரு கமிட்டி நியமித்திருக்கின்றனர். கவர்னர் பெருமான் இவர்கள் வேண்டுகோளுக்கு இணங்குவார் என்று நாம் நினைக்கவில்லை. ஒருக்கால் இணங்கிவிடுவாரானால் அப்பொழுது பெரியதோர் சமூகப் போராட்டம் நமது நாட்டில் நடைபெறும் என்பது உறுதி.*

*இதைத் தவிர தஞ்சை ஜில்லா போர்டின் செய்கையைக் கண்டித்தும், அதன் தீர்மானங்களை ரத்துச் செய்யும்படியும், கும்பகோணம் பார்ப்பனர்கள் பலர் கூடிக் கையொப்பமிட்டுக் கவர்னர் பெருமானுக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்களாம். இதுவும் பார்ப்பனர்களின் சமூகப் பற்றைக் காட்டுவதற்கு ஓர் உதாரணமாகும்.*

*மேற்படி சென்னைக் கூட்டத்தில் தோழர் சீனிவாச சாஸ்திரியார் பேசும்போது "பழக்கவழக்கங்கள் முதலியவைகளைப் பற்றிய விஷயங்களில், நிதானமாக, முற்றிலும் வளர்ந்த பொது ஜன அபிப்பிராயத்தின் பலத்தைக் கொண்டுதான் சீர்திருத்தம் செய்வது மிகவும் முக்கியமான காரியம்" என்று கூறியிருக்கிறார்.*

*தஞ்சை ஜில்லா போர்டு தீர்மானத்திற்கு எந்தப் பொதுஜன எதிர்ப்பு இருக்கிறது என்று கேட்கிறோம். அணைந்து வரும் வைதீக விளக்கைக் காப்பாற்றப் பறந்து திரியும் மடிசஞ்சிக் கூட்டங்கள் தானா பொது ஜனங்கள். இந்த மடிசஞ்சிக் கூட்டங்களின் சுய நலக்கருத்துக்குத் தலைவணங்கி நடப்பதானால் 100க்கு 97 மக்களாயுள்ள பார்ப்பனரல்லாதார் கதி எப்படியாவது? அவர்கள் பார்ப்பனர்களின் "வைப்பாட்டி மக்கள்", "அடிமைகள்" என்ற இழிவான பொருளைக் காட்டும் சூத்திரர்களாகவேதான் வாழ வேண்டும். இந்தக் காரியத்துக்குக் கடுகளவாவது மானமோ, சுயமரியாதை உணர்ச்சியோ உள்ள எந்தப் பார்ப்பனரல்லாதாராவது சம்மதிக்க முடியுமா?*

*தஞ்சை ஜில்லா போர்டின் தீர்மானத்திற்குப் பொது ஜன ஆதரவு மிகுதியாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. தஞ்சை*

*ஜில்லாவில் எந்தப் பார்ப்பனரல்லாதாரும், அத்தீர்மானத்தைக் கண்டிக்கவில்லை. ஜில்லா போர்டில், அதை மாற்றுவதற்காகப் பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சிகள் வீணாயின.*

*இன்னும் திருச்சி ஜில்லா போர்டு, தஞ்சாவூர் போர்டின் தீர்மானத்தைப் பாராட்டி ஆதரித்திருக்கிறது. வடஆர்க்காடு ஜில்லா போர்டும் இது போலவே தஞ்சை ஜில்லாபோர்டு தீர்மானத்தை ஆதரிக்கிறது. இன்னும் பல பொதுக் கூட்டங்களில் ஆதரிக்கப் பட்டிருக்கின்றது. ஆதலால் தஞ்சை ஜில்லா போர்டு செய்த தீர்மானம் பொதுஜன ஆதரவில்லாதது என்று எந்தக் குருடனும் சொல்ல மாட்டான்.*

*இச்சமயத்தில் பார்ப்பன சமூகத்தாருக்கு நாம் உண்மையாகவே எச்சரிக்கை செய்ய விரும்புகின்றோம். இப்பொழுது உலகம் மனித சுதந்திரத்துக்காகவும் உயிருக்காகவும் போராடிக் கொண்டிருக்கிறது. இச்சமயத்தில் நீங்கள் மானயீனமின்றிச் சோற்றுக்காகப் போராடுவீர்களானால் அது மிகவும் வெறுக்கத் தகுந்த செய்கையாகும். இந்த நாட்டு மக்களுடன் ஒன்றாகக் கலந்து வாழ உங்களுக்கு விருப்பமில்லை என்பதையே உங்கள் செய்கை காட்டுகிறது. இது உங்களுக்கு நல்லதல்ல. ஜெர்மன் மக்களுடன் சமூகவாழ்வில் ஒத்துழைக்காமல், சுயநலவாழ்விலேயே கருத்துக் கொண்டு வாழ்ந்து வந்ததால் தான் யூதர்களை, ஹிட்லர் ஜெர்மனியை விட்டே வெளியேற்றினார். இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த நாட்டுக்குப் போதுமான அரசுரிமை கிடைக்குமானால் ஜெர்மனியில் யூதர்களுக்கு வந்த கதியே உங்களுக்கும் வரக்கூடும். இதற்குத்தான் இப்பொழுது நீங்கள் விதை போடுகிறீர்கள் என்று எச்சரிக்கிறோம். நாம் சொல்லுவது சரியா? - அல்லவா? என்று யோசனை செய்து பாருங்கள்.*

*தஞ்சை ஜில்லா போர்டு தீர்மானத்தின் மூலம் ஒரு நல்ல உண்மையை உணர்ந்து கொண்டோம். பார்ப்பனர்கள் எந்த உயர்ந்த பதவியில் இருந்தாலும் அல்லது எந்த ஈனத்தனமான செய்கைகளைச் செய்து கொண்டிருந்தாலும், அவர்கள் தங்கள் ஜாதி உயர்வைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்குத் தவறவே மாட்டார்கள் என்பதே அந்த உண்மை! இதை காங்கிரசிலுள்ள பார்ப்பனரல்லாத தோழர்களும் தெரிந்து கொள்ளத் தஞ்சை போர்டு வழிகாட்டியிருப்பது மறுக்க முடியாததாகும்.*

*ஆகவே நாம், பார்ப்பனர்களே நமது சமூகத்திற்கு விரோதிகள்; அவர்களுடைய கொள்கையின் காரணமாக அவர்களால் நம்முடன் ஒத்துப்போக முடியவில்லை; ஆதலால், பார்ப்பனர்களின் கொள்கைகளுக்கு ஆதரவளிக்கும் எல்லா வசதிகளையும், வேரோடு கிள்ளி யெறியவேண்டும்; என்று கூறிவருகிறோம். இப்பொழுதாவது பார்ப்பனர்களின் சுயநலப் போக்கை உணர்ந்து கொண்டீர்களா?* **('விடுதலை' 07.04.1941)**

**3.8.1945இல் நடைபெற்ற திருநெல்வேலி நகராட்சி மன்றக் கூட்டத்தில், "நெல்லை ஓட்டல்களில் ஆதிதிராவிடருக்கு லைசென்சுகள் ரத்து செய்யப் படவேண்டும்" என்ற தீர்மானத்தை விளக்கிப் பேசுகையில், கவுன்சிலரும், திராவிடர் கழகத் துணைத் தலைவருமான தோழர் ஏ.அருணாசலம் 'இத்தீர்மானம் நிறைவேறாவிடில், தம்மைச் சேர்ந்தவருடன் தாம் இஸ்லாம் ஆகி விடுவதாகக் கூறினார்.**

**பின்னர் ஓட்டல்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறியது.**

**– 'குடிஅரசு', 25.8.1945**

*1957இல் ஓட்டல்களில் 'பிராமணாள்' ஓட்டல் என்று ஜாதி ஆதிக்கத்தைப் பறைசாற்றி விளம்பரப்படுத்துவதை எதிர்த்து, கவர்னருக்கும், அரசுக்கும் ஓர் அறிக்கை நோட்டீஸ் அனுப்புவது போல அனுப்பி, "லைசென்ஸ் தரும் அரசு, ஓட்டல்களில் பிராமணாள் கஃபே என்று போடக்கூடாது; மற்றதில் ஜாதியைக் கேட்காதே என்று கூறும் பார்ப்பனர்கள் (வகுப்புவாரி உரிமையிலிருந்து தப்பித்து உள்ளே நுழைவதற்காகவே இப்படி ஒரு தந்திரமான வாதம்) இந்த பெயர்ப் பலகையில் "பிராமணனை எடு, நீக்கு! என்று கூறுவதில்லையே ஏன்?" என்று கேட்டார் பெரியார்!*

*"ஜாதியின் அனுபவ ஆதிக்கமெல்லாம் பெரிதும் உணவிலே தான் வரையறுக்கப்படுகிறது; ஜாதியை ஒழிக்க வேண்டுமென்பவர்கள், அதே உணவுத் தன்மையில்தான் ஒழிக்கப்பாடுபடவேண்டும். அப்படியிருக்க, எதற்காக உணவு விடுதியில் ஜாதிப் பேர் போட அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்? இப்படி அனுமதிப்பது அரசாங்கத்தின் கொள்கைக்கும் நடப்பிற்கும் முரண்பட்டதாகும். இதை அரசாங்கம் சீர்திருத்தவில்லையானால் மக்கள் முயற்சித்துச் செய்ய வேண்டியது அவசியமாகிறது."* **– 'விடுதலை' அறிக்கை, 27.04.1957**

அதற்கு சிலர், 'அவர் ஓட்டலில்'தானே அவர் அப்படி விளம்பரப்படுத்திக் கொள்ளுகிறார்? அதில் என்ன தவறு? என்றும் கேட்கிறார்கள். அதற்கு 27.08.1958இல் கூட பெரியார் விளக்கம் அளித்துப் பேசினார் பல ஊர்களில்.

**– 'விடுதலை', 30.08.1958**

"…. நானும் இருபது வருடமாகச் சொல்லுகிறேன்; பார்ப்பானை 'பிராமணாள்' என்று சொல்லாதே; அவனை பிராமணன் என்றால், நீ யார்? ஒருத்தி உன் தெருவில், தன் வீட்டின் முன்பு "இது பதிவிரதை வீடு" என்று போர்டு போட்டுக் கொண்டால் மற்றவர்கள் வீடு என்ன என்று அர்த்தம்?" என்று கேட்டு அதை அகற்ற நாடு தழுவி, நடத்திய போராட்டம் 1957 மே மாதத்தில் தொடங்கி விளம்பரப் பலகைகளில் **'பிராமணாள்'** என்று இருப்பதை அழிக்க மாபெரும் கிளர்ச்சி செய்தார். தமிழ்நாடெங்கும் பெரும் பகுதி 'பிராமணாள்' என்ற சொல் விளம்பரப் பலகைகளில் மறைந்தது!

சென்னை திருவல்லிக்கேணியில் பைகிராப்ட்ஸ் சாலையில் இருந்த 'முரளீஸ் கஃபே' என்ற ஓர் ஓட்டலில் 'பிராமணாள் கபே' பெயரை எடுக்க மாட்டேன் என்று அந்த பார்ப்பனர் பிடிவாதம் பிடித்தார். தந்தை பெரியார் தார் சட்டியுடன் சென்று அப்பெயரை அழித்தார்!

அந்தப் போராட்டம் நாள்தோறும் மறியல், கைது என்று பல மாதங்கள் தொடர்ந்து நடந்து வந்தது. ஜாதி ஒழிப்புக்கான இந்தப் போராட்டத்தில் அன்னை ஈ.வெ. ரா.மணியம்மையார் உள்பட **1023 பேர் கைது,** தண்டனை. பல மாதம் கடுங்காவலுடன் சிறையேகி விடுதலை ஆகினர்.

பிறகு அந்த ஓட்டலில் (முரளீஸ் கஃபே) பலகையில் 'பிராமணாள்' 22.3.1958இல் ஒழிந்தது! முதலில் வீம்பு பேசிய அந்த ஓட்டல் முதலாளி பார்ப்பனர் சென்னையில் தந்தை பெரியாரை நேரில் சந்தித்து, தனது செயலுக்கு வருத்தமும் தெரிவித்துக் கொண்டார்!

தந்தை பெரியார் அன்பொழுக அவரை வரவேற்று தனது அருகே அமர்த்தி, அவர்மீது காட்டிய அன்பினால் அந்த உரிமையாளர் மிகவும் நெகிழ்ந்து போனார் என்பது வரலாறு!

அதன் தொடர்ச்சிதான், ஜாதியைப் பாதுகாக்கும் வர்ணாசிரம அரசியல் சட்டப் பிரிவுகள் எரிப்புப் போராட்டம் 26.11.1958இல்

நாடு தழுவியதாக நடந்தது என்பதும் வரலாறு. அரசமைப்புச் சட்ட நகலைக் கொளுத்தியவர்கள் 10,000 பேர் கைது செய்யப்பட்டனர், 3,000 பேருக்கு 6 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரை கடுங்காவல் விதிக்கப்பட்டது. போராட்டத்தில் தண்டனை அடைந்த பல தோழர்களில், சிறையிலும் வெளியிலும் மாண்டவர்கள் 18 பேர்கள் என்பது எங்கும் கேட்டிடாத ஜாதி ஒழிப்பு வரலாறு ஆகும்.

திராவிடர் இயக்கம் என்னும் மனித உரிமை இயக்கம் படிப்படியாக நிகழ்த்திக் காட்டிய ஆயுதம் ஏந்தாத புரட்சிகளின் விளைச்சலை அல்லவா இன்று நாம் ஒன்றாக அமர்ந்து ருசித்துக் கொண்டிருக்கிறோம்! சமத்துவ உலகிற்கான தலைவாசலாம் சம உரிமைக்கான போராட்டத்தில், அந்தத் தலைவாசலைத் திறந்துவிட்ட தலைமகனாம் நம் தலைவரின் பணியைத் தொடர்வோம்! சமத்துவ உலகம் படைப்போம்!

◆



“சுயமரியாதை இயக்கம் தேசத் துரோகமானது என்று தேசியவாதிகள் செய்து வந்த பிரச்சாரம், வகுப்புரிமையைப் பயன்படுத்தி முன்னேற்ற மடைந்த பார்ப்பனரல்லாதார் செய்த துரோகம் ஆகியவற்றை முறியடித்து வகுப்புவாரி உரிமை, உள்ளூராட்சிகளில் தாழ்த்தப்பட்டோருக்கும் பெண்களுக்கும் பிரதிநிதித்துவம் ஆகியவற்றை நிலை நிறுத்துவதில் வெற்றி பெற்றுவிட்டது. ஜாதி ஆணவம், அகம்பாவம் ஆகியவை நாட்டில் குறைந்து வந்துள்ளன. பார்ப்பனர் உள்பட எல்லா ஜாதி மக்களும் இன்று கூச்சமில்லாமல் சேர்ந்துண்ண முடிகிறது. ஈரோடு சுயமரியாதை மகாநாட்டிலும், விருதுநகர் சுயமரியாதை மகாநாட்டிலும் ஆயிரக்கணக்கான மக்கள் ஒரே பந்தியில் சமமாக உட்கார்ந்து சாப்பிட்டதை (1930, 1931) இயக்க எதிரிகளும்கூட இருந்து பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். எவ்வித ஒளிவு மறைவுமில்லாமல் - பார்ப்பன ரல் லாத, சைவர்கள் அல்லாத - “நாடார்கள்” சமையல் செய்தார்கள். ஈரோட்டில் “பறையர்கள்” முதல் எல்லா ஜாதியினரும் எல்லா மதக்காரரும் பரிமாறினார்கள்.